நவமீ ச தஸமைகாதஸீ வாதஸிகா ததா ।
த்ரயொதஸீ சதுர்தஸ்யா வக்ஷ்யாமி
ஸ்ரீக்ருஷ்ணபக்ஷஜாः ॥உ॥

க்ருஷ்ண சதுர்தஸ்ய ததா ஸ்ருஷ்டிः வஜ்ரதெஹா ஸ்ருதிः ।
உஷாஹ்வாதஸி வக்ஷாஹ்வாம் நாமः த்ரிம்ஸத்திநாத்மகாः ॥

சுக்கிலபக்ஷம் கிருஷ்ணபக்ஷம் என்ற பிரிவுகளினுலே 30 எண்ணிக்கைகளான திதிகளின் ஸ்வரூபங்கள்.

(நிருஸிம்ஹபிராஸாதத்தில்)

233. அவைகளில் முதலில் திதிகளின் பெயர்கள்.

(சைவாகமத்தில்)

திதிகளைக்கூறுகின்றேன். பிரதிபத் (பிரதமை) 1, துவிதியை 2, திருதியை 3, சதுர்த்தீ 4, பஞ்சமீ 5, ஷஷ்டீ 6, ஸப்தமீ 7, அஷ்டமீ 8, நவமீ 9, தசமீ 10, ஏகாதசீ 11, துவாதசீ 12, திரயோதசீ 13, சதுர்தசீ 14, பூர்ணிமை 15 என சுக்ல பக்ஷத்தில் திதிகள் 15 களாம். அவ்விதமாகவே கிருஷ்ணபக்ஷத்தில் பிரதமை முதல் சதுர்தசி முடிய திதிகள் 14களாம். 15வது திதியானது தர்சம் (அமாவாஸ்யை) எனப்படும். இவ்விதமாக சுக்லம் கிருஷ்ணம் என்ற இரண்டு பக்ஷங்களைக்கொண்டது, 15+15=30 நாட்களைக் கொண்டது ஒருமாதமாகும்.

உசை தத்ரூஷ ஸுஷுவுதிவஸ் ஷுஸுவழி.

கியயொ ஹி வுவக்ஷுஷெ வுதிவஸ் ஜிலுஜா

ஸுஸுணா |

ஷெஷுஸ ஸுக்ஷிவாதூர ஸா ஷ்வெதவக்ஷாஜிஸ உதா ||

(ஸுஸுணவணஸு)

234. அவற்றுள் முதலில் சுக்கில பிரதிபத்தின் ஸ்வரூபம்.

திதிகளின் ஸ்வரூபங்களைக்கூறுகின்றேன். சுக்லபக்ஷம் பிரதமை திதியின் அதிதேவதையான பிரதிபத்து என்பவள் 2 கைகளையுடையவளும், சிவப்பு நிறமாக இருப்பவளும், ஆட்டின்மேல் வீற்றிருப்பவளும், சக்தி, பாத்திரம் இவைகளை ஏந்திக்கொண்டிருப்பவளுமாவாள். (சிவப்பு நிறம்)

உகரு சுய ஸுக்லதிதீயா ஷாடவிதி

திதீயா ஹம்ஸமா ஸுஸ்தா ஸுஸ்வாஷ்டகயாயினீ ।
(ஸுஸ்வணஸ்தா)

235. சுக்கில துவிதீயையின் ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் துவிதீயை திதியின் அபிமானி தேவதையானவள், அன்ன வாஹனத்தின்மீது செல்லுகின்றவளும், வெளுப்புநிறமாக இருப்பவளும், வெண்மையான புஸ்தகத்தை வைத்துக்கொண்டு இருப்பவளுமாவாள். (வெளுப்புநிறம்)

உகசு. சுய ஸுக்லத்ருதீயா ஷாடவிதி.

த்ருதீயா வ்ருஷபா மஹதீ ஸுவாஹனாகுரா உதா ।
(மஹதிவணஸ்தா)

236. சுக்கில திருதீயையின் ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் திருதீயையின் அதிதேவதையானவள், விருஷப வாஹனத்தில் செல்லுகின்றவளும், வெளுப்பு நிறமாக இருப்பவளும், சூலம், பாத்திரம் இவைகளை கைகளில் வைத்துக்கொண்டிருப்பவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

உகள. சுய ஸுக்லசதுர்தீ ஷாடவிதி.

நீலொத்பலத்யுதிலாவண்ய சதுர்தீ கநகஷ்டிதா ।
வரஸுண்ட விஷ்ணு சக்ர வீதவஸ்த்ராஹிவல்யுதா ॥
(நீலொத்பலவணஸ்தா)

237 சுக்கிலபக்ஷம் சதுர்த்தியின் ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் சதுர்த்தி திதியின் அதிதேவதையானவள், நீலோத்பலத்தின் இதழ்போன்ற திருமேனியையுடைய

வளும், ஸுவர்ணமயமான ஆஸநத்தில் அல்லது ஊமத்தம் பூவில் வீற்றிருப்பவளும், மழுவையும், பாத்திரத்தையும் வைத்துக்கொண்டிருப்பவளும், பீதாம்பரத்தை தரித்துக் கொண்டிருப்பவளுமாவாள். (நீலோத்பலத்தின் நிறம்)

உகஅ. சுய ஸுக்லபக்ஷீ ஷஷ்டிவடி.

வம்கஜிஷ்ணு வ்ருஷாஹாரூ கண்டஷ்டகஹஸ்தினா ।

ஸம்வம் ஊர்ஜாம் தயா வாதூ விஹ்ராணா வஜ்ஜீ உதா ॥

(வ்ருஷாருவணஸ்ரீ)

238. சுக்கிலபக்ஷம் பஞ்சமியின் ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் பஞ்சமீ திதியின் அதிதேவதையானவள், தாமரைமலரில் வீற்றிருப்பவளும், பவழநிறமான திருமேனியையுடையவளும், கழுத்து, தலை இந்த இடங்களில் ஆபரணங்களையணிந்துகொண்டிருப்பவளும், சங்கம் முத்திரை (ஜ்ஞானமுத்திரையுடன்) பாத்திரம் இவைகளை தரிப்பவளுமாவாள். (பவழநிறம்)

உகக. சுய ஸுக்லஷஷ்டீ ஷஷ்டிவடி.

யஜ்ஞமாலாபூணா ஷஷ்டீ வாதூகுக்குடயாணிணீ ।

(சுபூணவணஸ்ரீ)

239. சுக்கில ஷஷ்டி ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் ஷஷ்டி திதியின் அதிதேவதையானவள், மயில் வாஹனத்தின்மீதுச் செல்லுகின்றவளும், சிவப்பு நிறமாக இருப்பவளும், பாத்திரம், கோழி இவைகளை தரித்துக்கொண்டிருப்பவளுமாவாள். (சிவப்பு நிறம்)

உசஅ. சுய ஸுக்லஸப்தமீ ஷஷ்டிவடி.

ஜெவவணஸ்ரீ ம்ருஹவாதூ ஹம்ஸஷ்டா வஜ்ஜீ உதா ।

(ஜெவவணஸ்ரீ)

240. சுக்கில ஸப்தமீ ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் ஸப்தமீ திதியின் அதிதேவதையானவள், புரசமரத்தினாலே செய்யப்பட்ட பாத்திரத்தை வைத்துக் கொண்டிருப்பவளும், மேகத்தைப்போன்ற திருமேனியையுடையவளும், அன்னபக்ஷியின்மீது வீற்றிருப்பவளும் ஆவாள். (மேகநிறம்)

உசக. சுய ஸுகாஷ்டீ ஹ்ரீவித்யை.

வம்டாவாஸ்யை மொஹ்யை மொக்ஷீரயவஸ்யை ஸ்வஹா।

(க்ஷீரவணம்)

241. சுக்கில அஷ்டமீ ஸ்வரூபம்.

சுக்கில பக்ஷம் அஷ்டமியின் அதிதேவதையானவள், மணி, பாத்திரம் இவைகளை தரிப்பவளும், மாட்டுக் கொட்டிலில் வஸிப்பவளும், பசுவின்பாலைப்போன்ற வெண்மையான நிறமுடையவளுமாவாள். (பசுவின்பாலைப் போன்ற நிறம்)

உசஉ. சுய ஸுகுஸுவஷ்டீ ஹ்ரீவித்யை.

நவஷ்டீ ஹிம்ஹமா ஸுஹ்யா வாஸுவாஸ்யை உதா।

(ஸ்வேதவணம்)

242. சுக்கில நவமீ ஸ்வரூபம்

சுக்கிலபக்ஷம் நவமியின் அதிதேவதையானவள், ஸிம்ஹ வாஹநத்தில் செல்லுகின்றவளும், வெளுப்பு நிறமான திருமேனியையுடையவளும், பாசம், பாத்திரம் இவைகளை தரித்துக்கொண்டிருப்பவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

உசங. சுய ஸுகுஸுஷ்டீ ஹ்ரீவித்யை.

கூஷ்ணவணம் ஸுஸுயஷ்யா உஷ்ட்ரவாஹிணீ ॥

(கூஷ்ணவணம்)

243. சுக்கில தசமீ ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் தசமியின் அதிதேவதையானவள், கருப்பு நிறமாக இருப்பவளும், காட்டெருமையின் மீது வீற்றிருப்பவளும், தடியை கையில் வைத்துக்கொண்டு இருப்பவளுமாவாள். (கருப்பு நிறம்)

உசச. சுய ஸ்ரீகௌகாஹரீ ஷ்ரீவித்யை.

வகாஹரீ ஸ்ரமாரூடா தண்டாகதாரிண்யை நம: ।
ஸிதாநநாஸ்ரீர்ணாக்ஷீ ஸ்யாமாங்கநீலவஸ்த்ராதிகீ: ॥
(ஸிதவர்ணா)

244. சுக்கில ஏகாதசீ ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் ஏகாதசியின் அதிதேவதையானவள், மான்வாஹநத்தில் வீற்றிருப்பவளும், தராசு, கத்திரிக்கோல் இவைகளை வைத்துக்கொண்டிருப்பவளும், வெளுப்பு நிறமான முகமுடையவளும், சிவப்பு நிறமான கண்களையுடையவளும், இந்திர நீலக்கல்லைப்போன்று நீலமான சரீர காந்தியையுடையவளுமாவாள். (சித்திரவர்ணம்)

உசரு சுய ஸ்ரீகூர்மாஹரீ ஷ்ரீவித்யை.

கூர்மாஹரீ ஸ்ரமாரூடா ஸ்வேதவர்ணாரிவாதிணீ ॥
(ஸ்வேதவர்ணா)

245. சுக்கில துவாதசீ ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் துவாதசியின் அதிதேவதையானவள், கருடன்மீது வீற்றிருப்பவளும், மேகத்தைப்போன்ற நிறம் உடையவளும், சக்கரம், பாத்திரம் இவைகளை தரிப்பவளும் ஆவாள். (மேகத்தின் நிறம்)

உசசு ஸ்ரீ ஸுகுதுயொஷீ ஸ்வாஹிவழி.

வாவஸ்வாணயஸ்ரீ ஸ்ரீளஸ்ரீ உகஸ்ரஸ்ரீ துயொஷீ ।

(ஸ்ரீளஸ்ரவணஸ்ரீ)

246. சுக்கில திரயோதசீ ஸ்வரூபம்.

சுக்கிலபக்ஷம் திரயோதசியின் அதிதேவதையானவள், வில், அம்பு, இவைகளை தரித்துக்கொண்டிருப்பவளும், வெளுப்பு நிறமானவளும், மகரமத்ஸ்யத்தின் மீது வீற்றிருப்பவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

உசள ஸ்ரீ ஸுகுவதுஷுஷீ ஸ்வாஹிவழி.

ஸுஜ்வஸ்ரா வாடுஸாஹாஸ்ரா ஸ்ரீவா துகஸ்ரா உதா ।

நீலுகணா வெஸுகொவதயஸ்ரா ய வதுஷுஷீ ॥

(வாடுவணஸ்ரீ)

247. சுக்கில சதுர்தசீ ஸ்வரூபம்.

சுக்கில சதுர்தசியின் அதிதேவதையானவள், தாமரை மலரில் வீற்றிருப்பவளும், பாடலவர்ணமாக (பாடலம்—வெண்சிவப்பு) இருப்பவளும், பழம், பாத்திரம் இவைகளை கைகளில் வைத்துக்கொண்டிருப்பவளுப், நீலநிறமான கழுத்தையுடையவளும், பட்டுப்பூச்சியைப்போன்ற சிவப்பான கண்களையுடையவளுமாவாள். (பாடலவர்ணம்)

உசஅ. ஸ்ரீ ஸுகுவஹிணிஸுரா ஸ்வாஹிவழி.

ஸுஸுரா வஹிணிஸுரா ஸுஸ்ரா உளக்ஷிகாஹரணாஸுதா ।

ஸுயாவஹிணும் வடும் யதெ வாஸெ உக்ஷு

வியாநகுழி ॥

(ஸ்ரீதவணஸ்ரீ)

248. சுக்கிலபக்ஷம் பௌர்ணிமையின் ஸ்வரூபம்.

பௌர்ணிமையின் அதிதேவதையானவள், முயல் வாஹநத்தில் செல்லுகின்றவளும், வெளுப்பான சரீர காந்தியையுடையவளும், முத்துக்களாலான ஆபரணங்களை யணிந்துகொண்டிருப்பவளும், இடதுகையில் அமுதம் நிறைந்த கடத்தையும், வலதுகையில் (அதன்) மூடியையும் தரிப்பவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

உசுக. சுய கூர்ஷ்வ்ரதிவச்வ்ரஸ்ரீவ்ரி.

யஸிவஸ்ரா கூர்ஷ்வக்ஷாஷ்ரா வாரவஸ்வ்ரா வதஸ்ரூவா।
சுவ்ரூம் வாதும் வ்ரஸ்ரவம் வாவம் கரெயஸ்ரூதே
வதஸ்ரஹஸ்ரூஜா ॥

(யஸிஸ்ரவணஸ்ரா)

249. கிருஷ்ணபக்ஷம் பிரதிபத்தின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் பிரதமையின் அதிதேவதையானவள், புழுதியின் நிறமாக இருப்பவளும், ஸாரஸபக்ஷியின்மீது வீற்றிருப்பவளும், (ஸாரஸம்—உளர்க்குருவி என்று சிலரும், நீரில் வாழும் காடை என்று சிலரும் கூறுகின்றனர்) 4 முகங்களையுடையவளும், 4 கைகளுடையவளும், 4 கைகளிலும் அஸ்திரம், (ஆயுதவிசேஷம் அல்லது அம்பு) பாத்திரம், ஸ்ருவம் (ஹோமம் செய்வதற்காக மரத்தினாலே செய்யப்பட்ட முட்டைக்கரண்டி) வில், இவைகளை தரித்துக்கொண்டிருப்பவளுமாவாள். (புகை நிறம்)

உருய. சுய கூர்ஷ்ஷிதீயா வ்ரஸ்ரவிவஸ்ரி

ஷிதீயா கஸ்ரஸ்ரஹாவஸ்ரா வ்ரஷ்வ்ரா வாக்ஷகஸ்ரணிகா।

(ஸ்ரெகவணஸ்ரா)

250. கிருஷ்ணபக்ஷம் துவிதீயையின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் துவிதீயையின் அதிதேவதையானவள், ஆம்பல் நிறமானவளும், விருஷபத்தின்மீது வீற்றிருப்பவளும், ஜபமாலையும், கமண்டலத்தையும் தரிப்பவளும் ஆவாள். (வெளுப்பு நிறம்)

உருக. ஸுய கூர்ஷ்ணத்ரதீயா ஷ்ரீவித்யே.

த்ரதீயா தாக்ஷ்ரூபா நீலாம்வவா த்ரயாரா ஷ்ரூதா ।
(நீலவண்ரா)

251. கிருஷ்ண திருதீயையின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் திருதீயையின் அதிதேவதையானவள், கருட வாஹனத்தில் செல்லுகின்றவளும், நீலநிறமாக இருப்பவளும், சங்கம், பாத்திரம் இவைகளை தரிப்பவளும் ஆவாள். (நீலநிறம்)

உருஉ. ஸுய கூர்ஷ்ணவதுர்தீ ஷ்ரீவித்யே.

வதுர்தீ கஜ்ஜலாபா ஸுஹிஷ்ஷா வதுர்ஹஸ்தாஜா ।
யதேஷ்டாபாலிகாம் ஶம்பம் வாமம் வாத்யம் வ ஹக்ஷிணை ॥
(கூர்ஷ்ணவண்ரா)

252. கிருஷ்ண சதுர்தீ ஸ்வரூபம்.

கிருஷ்ண சதுர்தியின் அதிதேவதையானவள், மை போன்ற திருமேனியையுடையவளும், எருமையின் மீது வீற்றிருப்பவளும், 4 கைகளுடையவளும், (வலது கைகளில் ஜபமாலை, தண்டங்களையும், இடது கைகளில் பாசம் பாத்திரங்களையும் வஹிப்பவளுமாவாள். (கருப்பு நிறம்)

உருங. ஸுய கூர்ஷ்ணவங்தீ ஷ்ரீவித்யே.

ஶ்ராஹஷ்ரா வம்ரிகா மளாரா வங்தீ வாக்ஷகாம்பிகா ।
(ஶ்வேதவண்ரா)

253. கிருஷ்ணபஞ்சமியின் ஸ்வரூபம்

கிருஷ்ணபக்ஷம் பஞ்சமியின் அதிதேவதையானவள், நிலவைப்போன்ற வெளுப்பு நிறமானவளும், ஜபமாலை, கிண்டி இவைகளை தரிப்பவளுமாவாள். (வெளுப்புநிறம்)

உருச கூய கூஷ்ணஷஷ்டீ வ்யாஹ்ருதிவழி.

தூக்ஷா யஸ்ரமா ரக்தா ஸக்திகுக்குடயாரிணீ ।
வராவ்யா விலாஜா ஷஷ்டீ ரக்தவஸ்த்ராவஸ்ரோஹிதா ॥

நீலகுண்டலகா வஸ்யா ஜடாவம்பத்ரலம்பிதா ।

(ரக்தவர்ணா)

254. கிருஷ்ணபக்ஷ ஷஷ்டி ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் ஷஷ்டியின் அதிதேவதையானவள் 3 கண்களுடையவளும், மயில் வாஹனத்தில் செல்லுகின்ற வளும், சக்தி, கோழி இவைகளை தரிப்பவளும், ஒரே முகமுடையவளும், 2 கைகளுடையவளும், சிவப்பு ஆடையை அணிந்துகொண்டு பிரகாசிப்பவளும், நீலக்கற்களாலே செய்யப்பட்ட குண்டலங்களையணிந்து கொண்டிருப்பவளும், வசியம் செய்யும் சாமர்த்தியமுடைய வளும், அல்லது தன்னடக்கமுடையவளும், ஜடையில் சந்திரகலையை அலங்காரமாக தரித்திருப்பவளுமாவாள். (சிவப்பு நிறம்)

உருரு. கூய கூஷ்ணஸப்தமீ வ்யாஹ்ருதிவழி.

ஹஸ்தா ஸப்தமீ மராரா விலாஜா வஜ்ரயம்த்ரிணீ ॥

(மராரவர்ணா)

255. கிருஷ்ணபக்ஷம் ஸப்தமீ ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம், ஸப்தமியின் அதிதேவதையானவள், யானையின்மீது வீற்றிருப்பவளும், வெளுப்பு நிறமாக

இருப்பவளும், 2 கைகளுடையவளும், வஜ்ஜிராயுதத்தை பிரயோகிப்பதில் ஆற்றலுடையவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

உருசு. ஸய கூரஷ்ணாஷ்டமீ ஷ்ரீவித்யா.

வெதமா வாஷ்டமீ ரக்தா கூரஷ்ணேவா ஸதா ஸுஹா।
ஸக்ஷம் வெடம் தயா வஜ்ரம் வாதாம் யதே வதாஸுஜா॥

(ரக்தவண்ணா)

256. கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் அஷ்டமியின் அதிதேவதையானவள், பீரேதத்தின் மேலே செல்லுகின்றவளும், சிவப்பு நிறம் உடையவளும், கருப்பான கழுத்தையுடையவளும், மங்கள கரமான குணங்களுடையவளும், 4 கைகளுடையவளும், கைகளில் ஜபமாலை, கேடயம், கத்தி, பாத்திரம் இவைகளை தரிப்பவளுமாவாள். (சிவப்பு நிறம்)

உருள. ஸய கூரஷ்ணநவமீ ஷ்ரீவித்யா.

ஸவபுமா நவமீ தாமுஷ்ணீ ஸுஸதா ஸதா।

(ஸுஸவண்ணா)

257. கிருஷ்ணபக்ஷம் நவமியின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் நவமியின் அதிதேவதையானவள், ஸர்பத்தின் மீதேறிச்செல்லுகின்றவளும், பனையை (பனமரத்தைப்போன்ற அல்லது பனங்காயைப்போன்ற) தெத்திப்பற்களையுடையவளும், பச்சை நிறமாக இருப்பவளுமாவாள். (பச்சை நிறம்)

உருஅ. ஸய கூரஷ்ணதஸமீ ஷ்ரீவித்யா.

ஸிம்ஹாஸநஸ்திதா ஸுஸ்யா தஸமீ வீதகஸ்மலா।

ஜ்ஞாநஜ்ஞாநயா வெயம் வீதவஸ்த்ராஜ்ஜ்வாலிநீ ॥

(ஸ்ரஜ்வணபூ)

258. கிருஷ்ணபக்ஷம் தசமியின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் தசமியின் அதிதேவதையானவள், ஸிம்ஹாஸநத்தில் வீற்றிருப்பவளும், வெளுப்பு நிறமான திருமேனியையுடையவளும், மஞ்சள் நிறமான (ஸுவர்ண மயமான) குண்டலங்களை அணிந்திருப்பவளும், ஜ்ஞாந முத்திரை, அபயம் இவைகளையுடையவளும், மஞ்சள் நிறமான ஆடையையணிந்திருப்பவளும், தாமரை மாலையை யணிந்துகொண்டிருப்பவளுமாவாள். (வெளுப்பு நிறம்)

உருக. சுய க்ரூவ்ஜ்ஞாஸ்ரீ வ்ஹ்ரூம்வஷட்.

வாகாஸ்ரீ வ்ருஷாரூடா நீலவர்ணா த்ரிலோசநீ ।

(நீலவர்ணபூ)

259. கிருஷ்ணபக்ஷம் ஏகாதசியின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் ஏகாதசியின் அதிதேவதையானவள், வ்ருஷப வாஹநத்தின்மேலிருப்பவளும், நீல நிறமானவளும், முச்சூலத்தை தரித்துக்கொண்டிருப்பவளுமாவாள். (நீல நிறம்.)

உசுடி. சுய க்ரூவ்ஜ்ஞாஸ்ரீவ்ஹ்ரூம்வஷட்.

தாருவர்ணா மஹாரூடா வாருவெடாஹிவம்கஜா ।

ஆஸ்ரீ ஸ்ரூஹ வ்ருஷ்யம் நீலகுஸுமலலிதா ॥

(ரக்தவர்ணபூ)

260. கிருஷ்ணபக்ஷம் துவாதசியின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் துவாதசியின் அதிதேவதையானவள், சிவப்பு நிறமானவளும், ரதத்திலேறிக்கொண்டிருப்பவளும்,

பாத்திரம்—கேடயம்—கத்தி—தாமரைப்பூ இவைகளை தரிப்பவளும், வெளுப்பு உடையையணிந்துகொண்டிருப்பவளும், நீலத்தினுலான குண்டலத்தை தரிப்பவளும் ஆவாள். (கருப்பு நிறம்.)

ஓம் க்ருஷ்ணத்ரயோதஶ்யை ஸ்வாஹா.

ஸஶோககண்டகாவாணவாவவா த்ரயோதஶீ ।
விஷ்ணோ வொஷாஷிணீ க்ருஷ்ணவர்ணா த்ரயோதஶீ ॥
(க்ருஷ்ணவர்ணா)

261. கிருஷ்ணபக்ஷம் திரயோதசியின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் திரயோதசியின் அதிதேவதையானவள், அசோகத்தின் பூங்கொத்து—அம்பு—வில்—பாத்திரம் இவைகளை தரித்துக்கொண்டிருப்பவளும், 2 கைகளை உடையவளும், பாம்பின்மீது வீற்றிருப்பவளும், கருப்பு நிறமானவளுமாவாள். (அசோகம்—புரசு, நீர்நொச்சி) (கருப்பு நிறம்.)

ஓம் க்ருஷ்ணசதுர்தஶ்யை ஸ்வாஹா.

வஜ்ரஹஸ்தா வராஹா நீலா விஷ்ணோ வ சதுர்தஶீ ।
(நீலவர்ணா)

262. கிருஷ்ணபக்ஷம் சதுர்தசியின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் சதுர்தசியின் அதிதேவதையானவள், கட்கமிருகத்தின்மீது வீற்றிருப்பவளும், (கட்கம்—காண்டாமிருகம்) பெருமையுடையவளும், நீலநிறமாக இருப்பவளும், 2 கைகளுடையவளுமாவாள். (நீலநிறம்.)

ஓம் க்ருஷ்ணாவாஹ்யை ஸ்வாஹா.

ஸுகாவாஹ்யா வியாதவ்யா விஶோகாயை கதவ்யா ।

ஒலுபாவ ஹஷ்டிதா வெயம் ஒலுவிம்பயாரா கூரமா ॥

(உரகதவணபூ)

263. அமாவாஸியை யின் ஸ்வரூபம்.

கிருஷ்ணபக்ஷம் அமாவாஸியை திதியின் அதிதேவதை யானவள், 2 கைகளுடையவளும், மரகதப்பச்சைக் கல்லைப் போன்ற சரீர காந்தியையுடையவளும், தர்பைப்புற்களால் ஆன ஆஸநத்தில் வீற்றிருப்பவளும், தர்பைப்புல்லையும், பிண்டத்தையும், தரிப்பவளும், மெலிந்த சரீரத்தையுடைய வளுமாவாள். அமாவாஸியை தேவியை இவ்வித லக்ஷணங் களுடன் கல்பிக்கவேண்டும். [எனவே திதி தேவதைகளை, கீழே கூறப்பட்டிருக்கின்ற லக்ஷணங்களுடன் கல்பிக்க வேண்டும் என்று பொருள் கொள்ளவேண்டும்.] (மரகதத் தின் நிறம்.)

சுய ஸாகுவ்ரதிவஹாஷிஷ்ட கதபுவ்கூரதா நி---

(தெவஜ்ஞவிலாஸெ)

கதபூ வ்ரதிவதி.

தொஹாரூவ்ரக்ஷயாதி கூரஷிஃ விதுக்ரியாஃவி வ ।

ரணொவகரணம் கதபூ திஃள வ்ரதிவதீநிதடி ॥

கருப்பக்ஷம் பிரதமை முதலான திதிகளில் செய்யக்கூடிய காரியங்கள்.

(தைவஜ்ஞ விலாசத்தில்)

அவைகளுள் பிரதமையில்

உலோகம் கருங்கல், மரம் இவைகளில் சித்திரவேலைகள் செய்தல், பாய்முடைதல் முதலிய படுக்கைகளில் சித்திர வேலைகள் செய்தல், சித்திரங்கள் வரைதல், போர்க்கருவி களை (கத்தி முதலிய ஆயுதங்களை)ச்செய்தல், இவை

களுக்கு பிரதமை திதியானது சிறந்ததாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

த்விதீயாயாழி.

ஊஜீவிவாஹயாத்ராஷி வ்ருதிஷ்டாஹ்ருஷணாதிகம் |
வளஷ்டிவாஷ்டாதிகம் கூடீ த்விதீயாயாம் வியீயதெ ||

துவிதீயையில்

துவிதீயையில், முஞ்சிப்புல்லாலே செய்யக்கூடிய வேலிகள் விவாஹம், யாத்திரை, தேவதாபிரதிஷ்டை, ஆபரணங்கள், புஷ்டிகரமான காரியங்கள், வீடுகட்டுவது, முதலான காரியங்களைச் செய்யவேண்டுமென்று விதிக்கப் பட்டிருக்கின்றது.

த்ருதீயாயாழி.

வம்ஸீதவாத்யாவிலுவிதூகூடீ
ஸீஷஜ்ஞவளஜாஹ்ருஹவ்ருதிஷ்டாஃ |
காயம் த்விதீயெ ஜிவஹெ யத்ஸ்தம்
வஹா த்ருதீயெ ஜிவஹெவி தத்ஸ் வ்யாத்ஸ் ||

திருதீயையில்

ஸங்கீதம், வாத்தியம், ஸகலவிதமான சித்திர காரியங்கள், வீடுகட்டுதல் (கிருஹப்பிரவேசம்) இவைகள், திருதீயைதிதியில் செய்யத்தக்கவைகளாகும். துவிதீயையில் செய்யத்தக்கவைகளாகக் கூறப்பட்டவைகளும் (திருதீயையிலும்) செய்யத்தக்கவைகளாகும்.

சதுர்த்யாழி.

ரிக்தாஸ்வ கதுர்வ்யவஸ்யாஷ்ட(ஷ்ட)
விஷாத்ரிஹ்ருதாதி ச யாதி ஹிஜ்ஜிம் |

யஹஜலும தாஹு கூரதம வ ஸாஹெஃ
விதாஸஹாயாதி தயாநுஸாஹழி ॥

சதுர்தியில்

சதுர்த்தியில், ரிக்தாதிகளில் (ரிக்தா—சதுர்தி, நவமி, சதுர்தசி இந்த 3 திதிகள்) வதம், பந்தநம், சஸ்திரம், (ஆயுதம்) விஷம், அக்நி, பூதாதிஸித்தி இவைகளைச் செய்தால் அவைகள் ஸித்தியாகும். மங்களகரமான காரியங்களைச் செய்தால், ஒரு மாஸகாலத்தில் அழிவடையும். அவ்விதமே மாஸந்தோறும் அழிவடையும்.

வஜ்ஜஹழி.

யாதெூவ நயநொஹாஹஹூதிஷ்டாஸாஜ்ஜிவளவிகூம ।
விஸம் ஷ்ஸிஸம் ஸவஷுகஷு வஜ்ஜஹூம் ஸஹுஃஸிதழி ॥

பஞ்சமியில்

பஞ்சமியில், யாத்திரை, உபநயநம், விவாஹம், (தேவதாதி) பிரதிஷ்டை, சாந்திகமான காரியம், புஷ்டிகரமான காரியம், இவைகளை பஞ்சமியில் செய்யவேண்டும். பஞ்சமியில் (துவக்கிச்) செய்யப்படுகின்ற காரியமானது பஞ்சமியில் செய்யப்படும் ஸகல காரியங்களும், வெகுகாலம் நிலைத்திருப்பவைகளாம். என்று கூறப்பட்டிருக்கின்றது.

ஷஷ்டியில்.

ஹெஷாஹ ஷிஷணமொவாஷ்டஹுஸாகூயவிகூயம ।
ஹ ஷிஷாகஷு வ ஹெஷஜ்ஜும ஸவஷும ஷஷ்டஹூம
வியீயதெ ॥

ஷஷ்டியில்

ஸேவித்தல் (அண்டிப் பிழைப்பது) பூஷணம்—பசுமாடு—வீடு—யுத்தம்—விலைக்கு வாங்குவது, விற்பது,

பூஷண காரியம், மருந்து, இவை யாவும் ஷஷ்டி திதியில் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது.

ஸப்தமீ.

வாஹநவிநயநாராஹஸப்தகிஷாஹிவஸ்திரம் ।
க்ருஷிஹரிஷணஸம்ராஜம் ஸப்தம்யாம் ஸஜீர்ணிதம் ॥

ஸப்தமியில்

வீடு கட்டுதல், உபநயனம், விவாஹம், தேவதா பிரதிஷ்டை முதலான சரஸ்திர காரியங்கள், (சரம்—இடம் மாறுவது. ஸ்திரம்—அசைவற்றிருப்பது.) பயிரிடுதல், ஆபரணங்கள், யுத்தம் இவைகளை ஸப்தமியில் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது.

அஷ்டமீ—

த்விதீயாயாம் த்ருதீயாயாம் வணிஜ்யாம் கமிதாம்யஹி ।
தாந்ரி ஹிஜ்யுஷி காயஜ்ஞாணி ஸப்தம்யாமவிஜ்ஞாம்யஹி ॥

மற்றொருவிதம்

துவிதீயை, திருதீயை, பஞ்சமி இவைகளில் கூறப்பட்டிருக்கின்ற காரியங்கள் யாவும், ஸப்தமியில் செய்வதனால் ஸித்திக்கும்.

அஷ்டமீ.

ஸம்ராஜயாந்யாவிஜ்யவாஹநாஜ்யே
வ்ருத்தஷ்ரகோவாவிஜ்யமெவநாந்ரி ।
ஷ்ரீராத்தவணிஜ்யாவிஜ்யஹரிஷணாந்ரி
காயஜ்ஞாணிகாயஜ்ஞாணி ஸஹஸ்ரதியஜ்ஞாம் ॥

அஷ்டமியில்

யுத்தம், தானியம், ஸகலவிதமான வாஸ்து காரியங்கள், சில்ப காரியங்கள், கோபத்தினால் செய்யப்படுகின்ற காரியங்கள், ஸகலவிதமான லேகநங்கள், ஸ்திரீஸம்பந்தமான காரியங்கள், ரத்தினங்கள், பலவிதமான ஆபரணங்கள், இவைகள் ஸம்பந்தமான காரியங்களை அஷ்டமிதிதியில் செய்யலாகாது.

நவமி.

விஹ்ரஹம் நிஹ்ரஹம் சைவ ஸாதனோத்தேஹ நஹேஹநம் ।
நவம்யாம் லோஹதாரூணி வஹ்நிநாயுவிச காரயேத் ॥

நவமியில்

போரிடுதல், பகையை சிறையிடுதல், அல்லது விரட்டுதல், சத்துருக்களையழித்தல், பேதநம் செய்தல் (மித்திரர்களாக இருப்பவர்களுள் பேதபுத்தியை யுண்டுபண்ணுதல்) பற்பலவிதமான பூதகாரியங்கள் (பூத ஸித்தி முதலியவைகள்) இவைகளை நவமியில் செய்ய வேண்டும்.

தசமி.

வஸ்துகம் ஸம்மதம் யாத்ரா ஸ்வஸ்தம் ஜலுகரம் ச ।
தசாநம் ஸ்ரவகாயாணி தசம்யாம் காரயேத் ஸுதீ: ॥

தசமியில்

சரீரபுஷ்டியைத்தரக்கூடிய காரியங்கள், மங்களகரமான காரியங்கள், பிரயாணம் செய்தல், மனைபுகுதல், ஜலஸம்பந்தமான காரியங்கள், குறிப்பிட்ட நபரைக் காணுவது, வீட்டுக்காரியங்கள், இவைகளை, புத்திமானாகிய இருப்பவன் தசமி திதியில் செய்யவேண்டும்.

வகாதஶ்யாம்.

விவாஹகர்மவாணிஜ்யோபவாஸாதிலக்ஷணம் ।
வாஸ்துகம் ஸ்திரவ்ரதாத்யதைகாதஶ்யாம் வியீயதே ॥

ஏகாதசியில்

விவாஹம், பயிரிடுதல், வியாபாரம், உபவாஸம் முதலியன, ஆபரணம், வாஸ்து காரியங்கள், சில்ப காரியங்கள் இவைகளை, ஏகாதசியில் செய்யவேண்டும்.

த்வாதஶ்யாம்.

வ்ருத்திவ்யயாதி கார்யாணி யத்புண்யாதிகராணி ச ।
சரஸ்திராணி த்வாதஶ்யாமுத்தர ஶ்ரவணம் விநா ॥

துவாதசியில்

(தனம் தானியம் முதலியவைகளை) பெருக்குவது, சிலவு செய்வது ஆகிய காரியங்களையும், தருமமான நிலைத்திருப்பதற்கான காரியங்களையும், சரகாரியங்கள், ஸ்திர காரியங்கள் இவைகளையும், (சரம்—நிலைமற்றது, ஸ்திரம்—நிலைத்திருப்பது) சிரவண துவாதசி நீங்கலான மற்ற துவாதசியில் செய்யவேண்டும். (சிரவண துவாதசி—சிரவண நக்ஷத்திரத்துடன்கூடிய துவாதசி. சிரவணம்—திருவோணம்.)

த்ரயோதஶ்யாம்.

க்ஷேமம் த்ரவம் ச ஸௌஹார்தம் ஸம்ஜ்ஞம் நாடகம்
ஹர்ம்யலக்ஷணம் ।
ஸ்தாபனக்ஷோபதாயாதி ரௌத்ரம் த்ரயோதஶ்யாம் தத்
காரயேத் ॥

திரயோதசியில்

க்ஷேமகரமான காரியங்கள், நிலைத்திருக்கவேண்டிய காரியங்கள், ஸௌபாக்கியத்தைக் கொடுக்கக்கூடிய

காரியங்கள், மங்களகரமான காரியங்கள், நாட்டியம், ஆபரணங்கள், அசுவசிக்ஷை, எழுதுவது இவைகளை, திரயோதசியில் செய்யவேண்டும்.

வதூஷுஸ்யாழி.

*உஷ்யாவநதெயும் வ ஸாம்ஸ யாத்ரூவநாயநம் ।
வதூஷுஸ்யாம் ந கதுவுஷநுவ ஸுலகுஷு வா ॥

சதுர்தசியில்

பல் துலக்குவது, தைலம், (தேய்த்துக்கொள்ளுவது) மாம்ஸம், (புசிப்பது) யாத்திரை, (செய்வது) உபநயநம், (செய்வது) மற்றும் சுபகாரியங்கள், இவைகளை சதுர்தசி திதியில் செய்யக்கூடாது,

வளணுஷாஹ்யாழி.

யஜ்ஞக்ரியாஸம்ஸ்தவளவிதாநி
ஸம்ப்ராப்யொத்ஸாஹயுவாஸ்ஸுகஷு ।
உத்ஸாஹஸம்பாவிதஸர்வகார்யம்(ர்யா)
காயம் ஸ்ரதிஷ்டா வது வளணுஷாஹ்யாழி ॥

பௌர்ணமியில்

வேள்விச்சடங்குகள், மங்களகரமான காரியங்கள், சரீர புஷ்டியையளிக்கும் மருந்துண்ணல் முதலிய காரியங்கள், போர்புரிவதற்குவேண்டிய ஸகல காரியங்கள், வீடு ஸம்பந்தமான காரியங்கள், திருமணம், சில்பகலைகள், ஆபரணங்கள், தேவதாபிரதிஷ்டை இவைகளை, பௌர்ணமீ திதியில் செய்யவேண்டும்.

ஸுரவாஹ்யாயாழி.

ஸுரயாம் விதரகுதெஜுகம் கதுவுஷிதரஸ்ஸு தம் ।

---

*தெயும் உஷ்யாவநம் அ உதி யுக்தஃ வாஃ ।

அமாவாஸியையில்

அமாவாஸியை திதியில், பிதிருக்களுக்குச்செய்ய வேண்டிய காரியத்தை மட்டிலும் செய்யவேண்டும். மற்ற எந்தக்காரியத்தையும் செய்யக்கூடாது.

ஸுய ஸுக்ருஷ்ணபூர்திவஷாதிதியிஷு விஷ நாமீ
பூர்வெஷுகாலஃ.
(ஸாமாவலியம்)

ஹயொ கஅ. லயா கச. லுயொ கங நாஸா கலி
வஸு உச. நாரீ உலி. வஸு உஉ. வஸு உச ।
வஸு உஉ வஸு உச. கவிம் சக. விஷ்ணும் நிச-
ஸாலும் நஉ. வாகம் கள. வியஸ் கச கூர்ஸாஸ் ॥

பூகாஸாஞ்ஜெணை —
(ஊஹஸ்பதி, மணவதள)

திதி கரு. வாணா நு, ஷு அ. வஷ்டா எ. ஜு சு.
வஜ்ஜு நு. வெஷ்டா சு. ஷு அ லலியஸாஃ எ. ।
திகீ கலி. வஜ்ஜு ந. கடு கஉ. உஸு கச. கூஷ்டாஸ்ரஸ் எ
வஸவொ அ. வாடிகாஃ கூர்ஸாஸ் ॥

சுக்கில-கிருஷ்ண-பிரதமை முதலான திதிகளில் விஷநாம பிரவேசகாலம்.

(ஸாராவளியில்)

சுக்கிலபக்ஷம் கிருஷ்ணபக்ஷங்களில் பிரதமை முதலான திதிகளில் முறையே பதினெட்டு 18, பதினான்கு 14, பதிமூன்று 13, முப்பது 30, இருபத்திநான்கு 24, இருபது 20, இருபத்திரண்டு 22, இருபத்திநான்கு 24 இருபத்திரண்டு 22, இருபத்திநான்கு 24, நாற்பத்தொன்று 41, ஐம்பத்தி நான்கு 54, முப்பத்திரண்டு 32, பதினேழு 17, பதிநான்கு 14

இவைகளில் விஷநாடீ பிரவேசமாம். (இந்த நாழிகைகளுக்குப்பிறகு 4 நாழிகை காலம் விஷநாடி காலமாகும் என்று கொள்ளவேண்டும்)

மற்றொரு முறை—(முஹூர்த்த கணபதி என்னும் நூலில்)

பிரதமை முதலிய திதிகளில் முறையே பதினைந்து 15, ஐந்து 5, எட்டு 8, ஏழு 7, ஆறு 6, ஐந்து 5, நான்கு 4, எட்டு 8, ஏழு 7, பத்து 10, மூன்று 3, பன்னிரண்டு 12, பதினான்கு 14, ஏழு 7, எட்டு 8 இந்த நாழிகைகள் விஷநாடீ காலமாம். (இந்த நாழிகைகளுக்குப்பிறகு 4 நாழிகை காலம் விஷநாடீ காலமாகும் என்று பொருள் கொள்ள வேண்டும்.)

உகூக. கூய ஸுஷ்ணூ ஹூதிவஷாதிதியிஷு
கதிஷுவுஷாகாநி.

(ஹாநதிஷாணள விஷ்ணுயஜோத்தரே அ)

ஹூதிவஷ்யு வஷ்ணாம் ஹிதீயாயாம் வ்ருதஷ்ணு ச ।
த்ருதீயாயாம் ஷியம்ருணாம் வதுர்யுஷ்யாம் ரஜதஷ்ணு ச ॥
வஞ்சுஷ்யாம் தஷ் ஷஷ்ணாம் வெ ஷஷ்டயாம் ஷ்ணாநஷ்ணு
ஹாநதஃ ।
வஷ்டயாம் வாஷஷ்ணாம் வெவ கூவஷ்டயாம் வெ
ஸுஷ்ணஷ்ணு ச ॥உ॥
கூர்ணுஷஷ்ணு நவஷ்யாம் தஷ் ஷுஷ்யாம் லொஜநஷ்ணு ச ।
வகாஷுஷ்யாம் வஷ்வணுஷ்ணு ஹாஷுஷ்யாம்
வஷநஷ்ணு ச ஃக॥
த்ரியொஷுஷ்யாம் ச ஸுஷ்ணாம் ஹிதாயாஷ்ஷுநஞ்சுஷ்ணாம் ।
ஹாநம் ச வாஷுஷாஷஷ்ணு வஞ்சுஷ்யாம் உஹாஷுஷ்டி ॥

சுக்ல பிரதமை முதலிய திதிகளில் செய்யவேண்டிய தானங்கள்.

(தானசிந்தாமணியிலும், விஷ்ணுதர்மோத்தரத்திலும்)

பிரதமையில் புஷ்பங்களையும், துவிதியையில் நெய்யையும், திருதியையில் பிரியங்குவையும், (பிரியங்கு—சாமை.) சதுர்த்தியில் வெள்ளரியையும், பஞ்சமியில் பழங்களையும் ஷஷ்டியில் ஸ்நானத்தையும், ஸப்தமியில் வஸ்திரங்களையும், அஷ்டமியில் வெல்லத்தையும், நவமியில் குல்மாஷத்தையும் (குல்மாஷம்—மிளகு முதலியவைகளுடன் ருசியாகவும் வாஸனையுள்ளதாகவுமிருக்கின்ற சஞ்சி.) தசமியில் நல்ல போஜனத்தையும், ஏகாதசியில் தங்கத்தையும், துவாதசியில் வஸ்திரத்தையும், திரயோதசியில் வாஸனைதிரவியங்களையும், சதுர்தசியில் கல்கண்டையும், பஞ்சதசியில் பரமான்னமென்று கூறப்படுகின்ற பாயஸத்தையும், தானம் செய்வதனால் மிகச்சிறந்த பலன் கிடைக்கும்.

ஸய ஸுக்லபூர்வதிவஸாதியிஷு
ஜாதானாம்ஸுனாம்.
(காலபிரகாஸே) பலம்—

பூர்திவஸ்ய நராஜ்யம் ஸ்யாத் ஜாதம் வீணயுதம்
வாஸஸா |

சுக்ல-கிருஷ்ண பிரதமை முதலிய திதிகளில் பிறந்தவர்களின் குணங்கள்

(காலப்பிரகாசத்தில்)

(அவற்றுள்) பிரதமையில்.

பிரதமைதிதியில் பிறந்த மனிதன், செல்வம் நிறைந்தவனாகவும், புண்ணியமான காரியங்களில் பற்றுதலுடையவனாகவுமிருப்பான்,

துவிதீயாயாம்—

விஜொகஷ்ஷ கவிஃ காஞ்ஃ காமுகஃ கருஹஷ்ரியஃ ।
துவிதீயாயாம் து ஜாஜாதொ மொயா நாயிவதி
லக்ஷணெ ॥

துவிதீயையில்.

துவிதீயை திதியில் பிறந்தவன், தக்கமற்றவனும், கவியும், அழகுடையவனும், காமமுடையவனும், கலகத்தை விளைவிப்பதில் பிரியமுடையவனும், பசுமாடுகள், தானியங்கள் இவைகளுக்கு அதிபதியுமாவான்.

தரதீயாயாம்—

ஜவஸ்ரீஜொ யநாஜ்ஞ வாணஜ்ஞஸ்ரீஜஃ ஸுஸுவவாநு ।
ஜொவீ வாக்ஷுரொ விஜாநு ஜாதஜ்ஞஜொ ஜயாதியள ॥

திருதீயையில்.

திருதீயை திதியில் பிறந்தவன் ஜபம் செய்துகொண்டிருப்பவனும், செல்வமுடையவனும், நல்ல காரியங்களை செய்பவனும், நல்ல அழகுடையவனும், புத்தியில் சிறந்தவனும், நன்கு பேசக்கூடியவனும், பண்டிதனும், தூய்மையுடையவனுமாவான்.

சதுர்தியாம்—

ஃநவெஷ்டஃ கூஸ்ரீஜ்ஞ கூநவீ ஃஸ்துதஸ்துவிஜ ।
சதுர்தியாம் ச தியள ஜாதஃ ஸஷ்ஷாஹஸகுஜுஜ ॥

சதுர்தியில்.

சதுர்தீதிதியில் ஜனித்தவன், வருந்தத்தக்க செய்கையுடையவனும், கெட்ட ஸ்வபாவமுடையவனும், சொத்தை நகமுடையவனும், மந்திரம், தந்திரங்களையறிந்தவனும்,

நல்லது கெட்டது எல்லாவற்றையும் ஸமமாக நினைப்பவனும், (அசடன் என்பது பொருள்) மூரட்டுத்தனமாக காரியங்களை செய்பவனுமாவான்.

வக்ஷ்யாம —

ஸுஸ்ய: காஸீ கஸ்யாஜ்ஜ: க்ஷஸீ வாஸ்ரிதவத்ஸல: ।
ஷஷ்யீஸ்திதியள ஜாத: காரு ணைர்வரித: கவி: ॥

பஞ்சமீதிதியில்.

பஞ்சமீதிதியில் பிறந்தவன், அழகாக இருப்பவனும், காமமுடையவனும், கலைகளைக்கற்றவனும், பொறுமையுடையவனும், அண்டியவர்களிடத்தில் அன்புடையவனும், கருணை நிறைந்த சரிதையையுடையவனும் (கருணையோடு காரியங்களைச் செய்பவனும்) கவியுமாவான்.

ஷஷ்யாம —

ஸுஜ்யஷ்ணுகவாநு வ்யாத: க்ஷுத்ரகோபீ ஜநாயிவ: ।
ஊவவ்ரஷ்டோரு திதிகு: ஷஷ்யாம் வம்ஜாயதெ நர: ॥

ஷஷ்டியில்.

ஷஷ்டி திதியில் பிறந்த மனிதன், ஜயிக்கமுடியாதவனும், சிறந்தபலமுடையவனும், அல்லது மனோபலமுடையவனும், பிரஸித்தியுடையவனும், ஸுலபமாக கோபம் அடையக்கூடியவனும், ஜனங்களுக்கு எஜமானனாக இருப்பவனும், முகம், பிருஷ்டம், துடை இவைகளில் திலகமுடையவனும், (திலகம் — மச்சம்) ஆவான்.

ஸப்தம்யாம —

தைவீ ஸகுவாநு ஸ்ரீமாநு ஸுரஸுரூஜ்: கஸுதகு: ।
ஸுரஷ்ஷிதாகுஷக்ஷ: வ்யாஜ ஜாதஸ்ஸப்தம்யதியள
ஸுஜா: ॥

ஸப்தமியில்.

ஸப்தமீ திதியில் பிறந்தவன், சிறந்த புத்திஸாமர்த்திய முடையவனும், ஸத்துவகுணமுடையவனும், அல்லது பலம் அல்லது மனோபலமுடையவனும், நிறைந்த செல்வமுடைய வனும், கருத்த சரீரமுடையவனும், கலைகளின் உருவமாக இருப்பவனும், ஆக்கல், காத்தல், அழித்தல் இவைகளில் ஸாமர்த்தியமுடையவனும், பிரபுவுமாவான். (பிரபு எதையும் செய்யும் ஸாமர்த்தியமுடையவன் ஏஜமானன். நிறைந்த செல்வமுடையவன் என்பன பொருள்.)

கூஷ்டயோம் —

கூஷ்டஸ்ஸ ஸ்ரீஜாஸீவவ்ருத்தீ: கூஷ்டகூ: ।
காஸீ கூஷ்டதூவாநு தூஸீ கூஷ்டயோம் ஜாயதெ நர: ॥

அஷ்டமியில்.

அஷ்டமீ திதியில் பிறந்த மனிதன், ஸந்தோஷமுடைய வனும், கஷ்டப்படுகின்றவனும் அயோக்கியத்தனமுடைய வனும், அல்லது பிறரறியாமல் தீங்கு செய்கின்றவனும், செல்வமுடையவனும், கீழ்த்தரமான வியாபாரமுடைய வனும், கபாதிகமான சரீரமுடையவனும், காமமுடைய வனும், மனைவியுடனிருப்பவனும், த்யாகம் செய்கின்றவனு மாவான்.

நவயோம் —

நாஸ்திகொ நிலுயஃ வ்யாதொ ஜீவுவெஸீ ச வஸ்ஸீதஃ ।
ஸுரஃ கூவாதூவாநு வஸ்ஃ நவயோம் ஜாயதெ நர: ॥

நவமியில்.

நவமீதிதியில் ஜனித்த மனிதன், நாஸ்திகனும், பயமற்றவனும், பிரஸித்தியுடையவனும், நீடித்த வைர

முடையவனும், பாண்டித்தியமுடையவனும், சூரனும், கெட்டபிள்ளையையுடையவனும், வசீகரண ஸாமர்த்திய முடையவனுமாவான்.

ஏஜ்யாம —

யாஜ்யகோ யஜவா நாஜ்யஃ வாத்ருத்ருஹ்ருத்வாநு ।
நீதிஜ்ஞாநு வதத்வாநு வித்வாநு ஏஜ்யாம் ஜாயதெ நரஃ ॥

தசமியில்.

தசமீ திதியில் பிறந்தவன், தருமம் செய்கின்றவனும், செல்வமுடையவனும், ஸகலவிதமான ஸம்பத்துக்களும், நிறைந்தவனும், புத்திரர்கள், மித்திரர்கள், மனைவி இவர்களுடன் இருப்பவனும், நீதிகளையறிந்தவனும், ஸத்தியத்தையே பேசுகின்றவனும் வித்துவானுமாவான்.

வகாரஜ்யாம —

வித்ருஷெவாஜிலக்ஷ்ய காயெஷ்ணெஷ்டீ ஜயொத்ஸுகஃ ।
யஜவாநு ஷ்ரத்தாகாயுஷ்ண மொவிந்தியிஜொ நரஃ ॥

ஏகாதசியில்.

விஷ்ணுவுக்கு பிரியமான ஏகாதசீ திதியில் பிறந்தவன், பிதிருக்கள், தேவதைகள் முதலியவர்களிடத்தில் பக்தியுடையவனும், காரியத்தில் முயற்சியுடையவனும், ஜயத்தில் உத்ஸாகமுடையவனும், பணம் படைத்தவனும், பிரபுக்களைப்போல் காரியங்களைச் செய்கின்றவனுமாவான்,

ஆஜ்யாம —

காமீ கலாவீ(ஜ்ஞஃ)விக்ராந்தஃ காந்தஃ ஸாஜெஷ்ட
யநாயிவஃ ।
யீஜ்யாஷ்டீ ஸுவீ வீரொ ஆஜ்யாம் ஜாயதெ நரஃ ॥

துவாதசியில்.

துவாதசிதிதியில் பிறந்த மனிதன், காமமுடையவனும், சுற்றத்தாருடன்கூடி இருப்பவனும் (கலைகளையறிந்தவனும்) சிறந்த பராக்கிரமமுடையவனும், அழகுடையவனும், சாந்த ஸ்வபாவமுடையவனும், நிறைந்த செல்வமுடைய வனும், தைரியமுடையவனும், தியாகம் செய்பவனும், ஸுகமாக இருப்பவனும், வீரமுடையவனுமாவான்.

தூயொஹ்ரூம் —

வளஉஃ காஃ ஜயீ விஜாநு ஞுஷ்ஃ வஸ்ரூ
ஜவஞாதகஃ ।
யநவாநு நஸ்தமொலொகூ தூயொஹ்ரூம் தூ
ஜாதவாநு ॥

திரயோதசியில்.

திரயோதசி திதியில் பிறந்தவன், அழகுடையவனும், காமியும், ஜயமுடையவனும், வித்துவானும், பேராசை யுடையவனும், சஞ்சலமான புத்தியையுடைய பிள்ளை யுடையவனும், தனமுடையவனும், நாட்டியம், பசுமாடுகள் இவைகளையனுபவிப்பவனுமாவான்.

வதூஹுரூம் —

கொவீ வஸ்ரூஉநா உஃ கூதஜ்ஞோ நாஹ்நிகோ யநீ ।
வஸுஹாஸுகஸ்ரூவ வதூஹுரூம் தூ வம்ஸவஃ ॥

சதுர்தசியில்.

சதுர்தசி திதியில் பிறந்தவன், கோபமுடையவனும், மனோவசியமுடையவனும், அறிவில்லாதவனும், செய்நன்றி யுடையவனும், நாஸ்திகனும், தனமுடையவனும், பிறர் மனைவியிடத்தில் ஆசையுடையவனுமாவான்.

வஸந்தராஜீயம் —

தேவஜ்ஞபூஸுரேப்யோ வஸுபூ லோகே மஹாந யாதபுவாநு ।
வாதுஜிதுக்ஷ தூபூ: ஜாதோ வஸுதரீதியள ॥

பஞ்சதசியில்.

பஞ்சதசி திதியில் (பௌர்ணமி–அமாவாஸைகளில்) பிறந்தவன், தேவர்களினாலேயும் பிராமணர்களினாலேயும் அரசர்களாலேயும் பூஜிக்கத்தக்கவனும், போகபாக்கியங்களை யனுபவிப்பவனும் பசுமாடு, தனம், தானியம் இவைகளுடனிருப்பவனும், பிள்ளைகள், சினேகிதர்கள், மனைவி இவர்களுடனிருப்பவனுமாவான்.

ஸுகாராஜீயே —

ஸுரபூஜ்யகுலஸுதிவஷ்டிதியிஷு ஜாதமானவ:.

(ஜாதகாலங்கார)

தத்ர துதிவஸி —

வஸுபூஜநவரிவாரஸாரவிதோ விவேகீ
கநகரணிவிலாஸிஷாவெஷபாஜீ வபூரீஷு: ।
ஸுதிவஸுயுதிகாஞ்சிலபூதிவாரதத்தி:
துதிவஸி யதி வஸிதிஜபூயதே யவபூ ஜந்தோ:॥

மற்றொருவிதமாக — சுக்லபக்ஷம் கிருஷ்ணபக்ஷம் பிரதமை முதலிய திதிகளில் பிறந்தவர்களின் குணங்கள்.

(ஜாதகாபரணத்தில்)

பிரதமையில்.

பிரதமை திதியில் பிறந்தவன் பலவிதமான சுற்றமுற்றமுடனிருப்பவனும், அழகானவித்துவத்துடையவனும்,

சிறந்த அறிவு படைத்தவனும், ஸுவர்ணம், ரத்நங்களினு லான ஆபரணங்களை அழகாக அணிந்துகொண்டிருப்பவ னும், நல்ல ஸ்வபாவமுடையவனும், மிகச்சிறந்த அழகு வாய்ந்த சரீரகாந்தியையுடையவனும், அரசனிடத்திலிருந்து கிடைத்த செல்வமுடையவனுமாவான்.

ஹிதீயாயாம் —

ஓதா ஔஹுஃ முணவாநு ஸுஹஸ்வ
துஷுஸுஹுதாவாரவிவாரயதுஃ ।
வூஸஹுஃதிபுவுஹுஃதகீதிபுஃ
ஜாதொ ஹிதீயாதியிஹஸ்லவஃ ஸுரூஸு ॥

துவிதீயையில்.

துவிதீயை திதியில் பிறந்தவன், கொடையாளியாக இருப்பவனும், தயையுடையவனும், நல்ல குணங்களுடைய வனும், சிறந்த செல்வமுடையவனும், சிறந்து விளங்குகின்ற பிள்ளைகளின் செயல்களையுணர்ந்து பெருமையடைகின்ற வனும், தூயசரீரமுடையவனும், பலஹிதமாகத்துதிக்கப் படுகின்ற புகழையுடையவனுமாவான்.

கதீயாயாம் —

காஸாயிகஸ்ஸாஷநவதவிதுஃ
வஸுங்கொ ராஜகுலாத்தவிதுஃ ।
வூவாஸஸீஸுஷ்டகொ விஸுஹீ
தகுஷுஸுதீயாவூஸவொஷஹிஸாநீ ॥

திருதீயையில்.

திருதீயை திதியில் பிறந்த மனிதன், அதிகமான காம முடையவனும், குற்றமற்ற வித்தையையுடையவனும், பலம் படைத்தவனும், அரசகுலத்தில் ஸம்பாதிக்கப்பட்ட செல்வ

முடையவனும், வெளியூர்களுக்குச் செல்லுகின்ற ஸ்வபாவ முடையவனும், ஸாமர்த்தியமுடையவனும், ஆடை ஆபரணங்களை நன்கு அணிந்துகொண்டு பிரகாசிப்பவனும், தானென்ற அபிமானமுடையவனுமாவான்.

வதையூம் ---

மீணவு வுதீஃ வஹுவாஹவஃ ஹுாசு
ரணவுவீணஃ கூவணலுஹாவஃ ।
ஏுதெரதீஃ லொுஉா உருஷுஃ
வாஜீ யதி ஹுாஜ்ஜநமெ வதையீசு ॥

சதுர்த்தியில்.

சதுர்த்தீதிதியில் பிறந்தவன், கடன் வாங்குகின்றவனும், அசட்டுத்தனமாக பல காரியங்களைச் செய்கின்றவனும், போர் புரிவதில் ஸாமர்த்தியமுடையவனும், கருமித்தனமுடையவனும், சூதாட்டத்தில் ஆசையுடையவனும், அலைகின்ற மனமுடையவனும், (நிலைத்த மனமில்லாதவனும்) வாதம் செய்கின்றவனுமாவான்.

வஞ்சூம் ---

ஹம்வலணுமாதூ கூஹுதுவாது
ழிதூங்கிதொ லலிதஉயாங்கிதசூ ।
நரெம்ஊாஹுஷு நரொ வஷாஹுஃ
வுலலிதிகாலெ கிலு வஞ்சூ ஹுாசு ॥

பஞ்சமியில்.

பஞ்சமீதிதியில் பிறந்தமனிதன், ஒவ்வொரு அங்கங்களும் தக்கபடியமைந்து நிறைவுற்ற சரீரமுடையவனும், மனைவி பிள்ளைகள் சினேகிதர்கள் இவர்களுடன் கூடிய

வனும், ஸகலபிராணிகளிடத்திலும் தயையுடையவனும், அரசர்களாலே வெகுமதிக்கப்பட்டவனும், சிறந்த கொடையாளியுமாவான்.

ஷஷ்டியும் —

ஸதுவ்ரதிஜ்ஞோ யதஸ்ரீநஸ்வம்வ
ஸ்ரீவெபுஸ்ஸாநஸுநஸ்ஸோ ஸஹளாஃ ।
வ்ருஷ்ணிகீர்திர்ஸுதஸ்ஸோ வரிஷ்ஃ
ஷஷ்டியும் வ்ரஜதோ வ்ருணக்ஷுமாதுஃ ॥

ஷஷ்டியில்.

ஷஷ்டிதிதியில் பிறந்த மனிதன், உண்மையான பிரதிஜ்ஞையுடையவனும், (தனது சபதத்தை நிறை வேற்றுகின்றவனும்) பணம், பிள்ளைகள், ஸம்பத்து (பூமி, தனம், தானியங்கள் முதலியன) இவைகளையுடையவனும், நீண்ட தாடைகள், கண்டைக்கால்களையுடையவனும், அதிகமான காந்தியையுடையவனும், அதிகப்புகழுடைய வனும், குணங்களிலெல்லாம் மேன்மையுடையவனும், உடம்பு முழுமையும் புண்ணுடையவனுமாவான்.

ஸப்தமியும் —

ஜ்ஞாநீ குணஜ்ஞோ ஹி விஸாலநெத்ரஃ
ஸத்பாத்ரஸேவாவநவித்தவ்ருத்திஃ
கநீயஸநெதா வரவித்தஹர்தா
ஸப்தம்யஜோ உநுஜோ(ரி)ஹஜ்ஞா ॥

ஸப்தமியில்.

ஸப்தமீதிதியில் பிறந்த மனிதன், ஜ்ஞானியாகவும், நற்குணங்களை அறிந்தவனாகவும், (குணவானாகவும்) விசாலமான கண்களையுடையவனாகவும், ஸத்பாத்திரங்கள்,

(தாரதிகள் செய்வதற்குரிய குணங்களுடையவர்கள்) தேவதைகள் இவர்களை பூஜிப்பதில் ஈடுபட்ட மனமுடையவனும், பெண்ணை (தனக்குப்பிடித்தமான கலியாணமாகாத கன்னிகையை) அபஹரித்துச் செல்லுகின்றவனும், பிறருடைய பணத்தை அபஹரித்துக்கொண்டு செல்லுகின்றவனும், பகைவர்களை அழிப்பவனுமாவான்.

ஈஷ்டமீ ---

நாநாவம்ஸஸ்ஹிநாஸளவுஃ கூவாலுஃ
வ்யஷ்டீவாலுவ்யாஷவித்தவ்ருத்திஃ।
காஞ்சாஹ்ரீதி(த)ஜ்ஞலுஷ்ணாஞவ்ருத்திஃ
யஸ்யாஷ்டமீ ஜாயதெ ஜந்து ஸ ஸ்யாத் ॥

அஷ்டமியில்.

அஷ்டமீ திதியில் யாதொருவன் பிறக்கின்றானோ, அவன், பலவிதமான ஸம்பத்துக்கள், பிள்ளைகள் இவைகளாலே ஸௌக்கியமுடையவனும், கருணையுடையவனும், அரசர்களிடத்திலிருந்து கிடைத்த செல்வத்தினாலே நிலைத்த வாழ்வுடையவனும், மனைவியின் அன்புடையவனும், சஞ்சலமான மனோநிலையையுடையவனுமாவான்.

நவமீ ---

வாஹனைவொ வாஸுஜநஸ்ய காயெ
கொரவாகுஞ்ச ஸுயொதொ।
நரஸ்ஸதாரகுதாரஸ்ஸ்யாத்
யஸ்ய ஸ்யாத் தள நவமீதியிஸ்ஸ்யாத் ॥

நவமியில்.

நவமீ திதியில் பிறந்த மனிதன், பந்துக்களின் காரியங்களில் அநாதரவுடையவனும், கடுமையாகப் பேசுகின்ற

வனும், நல்ல மேதாவிகளை விரோதித்துக்கொள்ளுகின்ற வனும், ஸதாசாரங்களில் (நல்ல ஒழுக்கங்களில்) ஆதரவுடையவனுமாவான்.

உபஜாதம் —

யதொக்ஷஜ்ஞோ வதான்யோபி
வ்ரயஸ்வகண்டோ வதான்யவாதீ ।
உதாரசித்தோ நிதராம் விநீதः
ஸதாஜுஷ்டோ தீர்கஸுஹ்ருத் ஸ்யாத் ॥

தசமியில்.

தசமீ திதியில் பிறந்தவன், தருமத்திலேயே மன முடையவனும், பற்பலவிதமான செல்வமுடையவனும், தொங்குகின்ற கழுத்தையுடையவனும், பலசாஸ்திரங்களைக் கற்றவனும், மிகவும் தாராளமான மனோபாவமுடைய வனும், மிகுந்த வணக்கமுடையவனும், அழகுடையவனும், காமமுடையவனுமாவான்.

வனகாபஜாதம் —

தெவஜிஹ்வபூவ்ருதோ நமீஶः
வாநிஜுராஜுः கரணः வ்ரவீணः ।
வாணைகசித்தோ ஹரகஜுகூஜ ஸ்யாத்
வனகாபஜீஜோ திகுமொதிரோஷः ॥

ஏகாதசியில்.

ஏகாதசீ திதியில் பிறந்த மனிதன், தேவதைகள், பிராமணர்கள் இவர்களை பூஜிப்பது விரதங்களை அனுஷ்டிப்பது, தானங்கள் செய்வது இவைகளைச் செய்து கொண்டிருப்பவனும், மிகத்தூய மனமுடையவனும், நல்ல

ஸாமர்த்தியமுடையவனும், புண்ணிய கர்மாக்களையே செய்வதில் மனமுடையவனும், குருவின் காரியம் செய்பவனும், மிக மெலிந்தவனும், மிகக்கோபமுள்ளவனும் ஆவான்.

ஆஹுர்யாம் —

ஜநுஷ்யொ வெ வ்ருவஹாரஸீலுः
நீவாரயாவாஹவிஸ்ருஷ்டவ்ருத்திः।
ஹஹாஹுஹாதா க்ஷிதிவாஹுவித்தः
ஹ்யாஸு ஆஹுரீஜோ உநுஜः வ்ருஜாவாநு॥

துவாதசியில்.

துவாதசீ திதியில் பிறந்த மனிதன், ஜலத்தில் பிரியமுடையவனும், வியவஹாரம் செய்யும் ஸ்வபாவமுடையவனும், அல்பமான அல்லது மட்டமான குடிசை முதலிய வீடுகளில் வஸித்துகொண்டு ஸந்தோஷமாக இருக்கும் ஸ்வபாவமுடையவனும், எப்பொழுதும் அன்னதானம் செய்கின்றவனும், அரசர்களிடத்திலிருந்து கிடைத்த செல்வத்தையுடையவனும், பிள்ளைகளுடையவனுமாவான்.

த்ரயொஹ்யாம் —

ஸுவாஸிதः ஹாக்விகதாவிஹஸ்தः
ஹ்ரும்வைகண்ணः சரணவ்ருஹதிः।
நரொஉதிஸுஸ்ருதஸுः ஹ்ருகாஉம்
த்ரயொஹரீ நாஉதியிஹ்ருஹதிः॥

திரயோதசியில்.

திரயோதசீதிதியில் பிறந்தவன், அழுதுடன்கூடியவனும் ஸாத்துவிகமான ஸ்வபாவமற்றவனும், தொங்குகின்ற கழுத்தையுடையவனும், காலால் பிறந்தவனும், (பிறக்கும்

பொழுது முதலில் கால்கள் வெளியே வந்து பிறந்தவனும்) அதிக சூரத்தனமுடையவனும், அதிக ஸாமர்த்தியமுடையவனுமாவான்.

வதூஷுஸ்ரீ---

கூரொZதிஸ்ரஸ்ரூதூரஷ்ஷஹாவஃ
கூநவபுரீஸ்ரகூரஸ்ரீதவ்யதீஃ ।
வ்யாஹ்ஷ்ஷஹொZதுஞ்சவிரூஜலாஷீ
வதூஷுஸ்ரீஜஃ வீரூஷஷ்ஷரொஷஃ ॥

சதுர்தசியில்.

சதுர்தசியில் பிறந்த மனிதன், கொடூரமான ஸ்வபாவமுடையவனும், மிகச்சூரனும், அதிக ஸாமர்த்தியமுடையவனும், (எப்பொழுதும்) சிரித்துக்கொண்டிருப்பவனும், மன்மதலீலைகளில் சுழலுகின்ற மனோநிலையையுடையவனும், ஸஹிக்கமுடியாதவனும், (ஸஹிக்கமுடியாத கெடுதிகளைச் செய்பவனும்) மிகவும் வீரோதமாகப்பேசுகின்றவனும், ரோஷமுடையவனுமாவான்.

வலிணிஷுஸாயாம்---

சுதிஹாஸ்ரஸ்ரிதகாயொ நாயவஸம்ரக்ஷவிதஃ
வஹூயவதிஸஹெதொ நிதம்ஸாதஷஷுஃ ।
வ்யவஸ்வவஸ்விரொZதுஞ்சகாரூணைவாணைஃ
ஸூணஸூணவரிவலிணஃ வலிணிஷுஸாஜாதஜ்ஞா ॥

பௌர்ணமியில்.

பூர்ணிமைதிதியில் பிறந்தவன், மிகவும் அழகான சரீரமுடையவனும், நியாயமான முறையில் ஸம்பாதித்த செல்வத்தையுடையவனும், அநேகம் யுவதிகளுடன் கூடி

யிருப்பவனும், எப்பொழுதும் ஸந்தோஷமாக இருப்பவனும் மிகச்சிறந்த வலிமையுடன் திகழ்கின்றவனும், மிகக்கருணையுடன் புண்ணியகாரியங்களைச் செய்கின்றவனும், ஸகல குணங்களும் நிறைந்திருப்பவனுமாவான்.

கோவாஹ்யாயம்—

ஸாஞ்ஞ உஷ்ணீ விதூயாதூயஹ்ஃ
ஜ்ஞாதவித்ஸு ஸாமஜ்ஞஹ்ஃ ।
ஸாஜ்ஞ்ய ஜநாநாம் ஹதகாஞ்ஜிஷ்ஃ
ஶ்ரோத்ரவாஸ் வாக்ஷிஷ்ஃ கூர்மாஜ்ஞஹ் ॥

அமாவாஸியையில்.

அமாவாஸியை திதியில் பிறந்த மனிதன், அடக்கமுடையவனும் (மன அமைதியுடையவனும்) தாராளமான மனதுடையவனும், தாய்-தகப்பனிடத்தில் பக்தியுடையவனும், கஷ்டப்பட்டுத்தேடிய செல்வத்தையுடையவனும், (பந்துக்களும், சினேகிதர்களும்) வந்துபோவதை விரும்புகின்றவனும், ஜனங்களுக்கு வெகுமதிக்கத்தக்கவனும், சோபை, ஸந்தோஷம், இவைகளில்லாதவனும், மெலிந்த சரீரமுடையவனுமாவான்.

ஸய ஸாக்ஷ கூர்ஷவக்ஷதியஹ்ஜிய நி
ஷெவதாநாம் காஸாநி —

(காஸ்யாதே)

வஹ்நிகூவஷ்டூர்ஹிஜாஜ்ரிஜா மணவதிஃ ஸவஃ
கூஜாஸ்ரோ ரவிஃ
மளரீஸ்ரோ வஸ ஸாமயஜுஹாரயஃ காஃ
கஸ்தூரி விகா।

வனதெஹவ-ுழிநாயிவாஃ வ்ரூஃ — —

— — — —

சுக்கில, கிருஷ்ணபக்ஷதிதிகளின் அபிமாநி தேவதைகளின் பெயர்கள்.

(காலாமிருதத்தில்)

அக்நி 1, துவஷ்டா 2, கௌரீ 3, கணபதி 4, ஸர்பம் 5, குமாரன் 6, ரவி 7, பரமேசுவரன் 8, வஸு 9, நாகம் 10, தருமதேவதை 11, விஷ்ணு 12, காமன் 13, கலி 14, சந்திரன் 15, பிதிருக்கள் 16, இவர்கள், முறையே, பிரதமை முதலியதிதிகளுக்த அதிதேவதைகளாவார்கள்.

உசுசை. ஈய ஸுக்ரூக்ரஷ்ணபக்ஷதியுஹிதாநி
தெவதா ஹ்வயதிவாணி —

தத்ரூஉள ஸுக்ரூக்ரஷ்ணபக்ஷப்ரதிபதுஹிதாநுதெந-
யுக்ரூநழி.

வஹ்நி வாக்ஷாதிஹாதெ ஈம் தெவாநாம்
ஹவ்யுவாஹக |
ஸாஞ்நிகாயுணி வர்ஜாயுதெதாம் உத்திஷ்ட வஷாவிஸ ||
(ஸ்தூவண-ுஃ)

264. சுக்கில கிருஷ்ணபக்ஷ பிரதமாபிமாநி தேவதா ஸ்வரூபங்கள்.

அவற்றுள் சுக்கில கிருஷ்ணபக்ஷ பிரதமையின் அபிமாநி தேவதையான அக்நியின் த்யாநம்.

தேவர்களை உத்தேசித்து ஹோமம் செய்யப்படுகின்ற ஹவிஸ்ஸை வஹிப்பவரான ஹே அக்நி பகவானே, நீர் பிரத்தியக்ஷமாக இங்கு வரவேண்டும். சாந்திகமான

கர்மாவில் பூஜிக்கவேண்டியதாக இருப்பதை உத்தேசித்து இந்த மூர்த்தியில் இருக்கவேண்டும். (சிவப்பு நிறம்)

உசுரு. சுய ஸுக்லபக்ஷதிதீயாஹிஸாநி
சுவஷ்டுர்தெவதாயாஃ ஸ்யாநம்.

சுவஷ்டர்ஜகுஸ்துயீயாதஃ வாநீஹி தயயா ஸஹீம் ।
வ்ருதிஸாயாஸுஷ்யாம் சுவம் லஹியஸுஷ்ய வதாஸுவ ॥

(ஸுக்லவணஃ)

265. சுக்கில கிருஷ்ணபக்ஷ துவிதீயையின் அபிமாநி தேவதையான துவஷ்டாவின் த்யாநம்.

மூன்று உலகங்களையும் காப்பாற்றுகின்றவரான ஹே துவஷ்டாவே, (தாங்கள்) தயவினாலே பூமியை புனிதப்படுத்த வேண்டும். நான்கு முகங்களுடையவரே, இந்தப் பிரதிமையில் ஸாந்நித்தியம் செய்யவேண்டும். (சிவப்பு நிறம்)

உசுசு. சுய ஸுக்லபக்ஷதிதீயாஹிஸாநி
வாயுர்தெவதாயாஃ ஸ்யாநம்.

வ்ருதிஸாயாம் ஹிரண்யயாஸெஹி வயுதக்நுகெ ।
நஸஸ்பதி வஷாஜ்யம் தெ வாயவ்ருதிவத்தயெ ॥

(ஸீதவணா)

266. சுக்கில கிருஷ்ண திருதீயாபிமாநி பார்வதீ த்யாநம்.

பர்வதராஜன் மகளான ஹே பார்வதீ தேவி, நீ ஸுவர்ணமயமான இந்த பிரதிமையில் வந்திருப்பாயாக. தருமம், அர்த்தம், காமம், மோக்ஷம் எனப்படும் புருஷார்த்தங்களை அடையவேண்டியதற்காக உன்னுடைய பாதாரவிந்தத்தை வணங்குகின்றேன். (மஞ்சள் நிறம்)

உசுஎ ஸ்ரீ ஸுதக்ருஷ்ணசதுர்த்யபிமானி
கஜானநதேவதாயாஃ த்யானம்

விஷாணதாரிணம்(ணகாரம்) வாமோதரபரசுதீரம்
ஹஸ்தம் ।
கஜானநாக்யம் த்ருஷ்ணீஷ்ட வரதாபயதம் வாஹயே ॥
(ஸுதக்ருஷ்ணா)

267. சுக்கில-கிருஷ்ண சதுர்த்தியின் அபிமானி தேவதையான கஜானநனுடைய த்யானம்.

விக்நமாகிய (விக்நம்—இடையூறு) பிரளய காலத்திற்ற (விக்நமாகிய இருளுக்கு) பால சூரியனைப்போல் இருப்பவரும், பார்வதி தேவியாரின் அழுக்கிலிருந்து ஆவிர்பவித்தவருமான ஹே கஜமுகனே, தாங்கள் அன்பு கூர்ந்து, இந்த பிரதிமையை வந்தடைந்து நான் செய்கின்ற பூஜையை ஏற்றுக்கொள்ளவேண்டும். (சிவப்பு நிறம்)

உசுஅ ஸ்ரீ ஸுதக்ருஷ்ணபஞ்சமீதிதாயாஃ
ஸர்பதேவதாயாஃ த்யானம்

ஸர்பராஜம் ஸமாஹ்வயதஃ வரதாயாம் நிஷீத ஹே ।
ஸர்பாபரணம் தே ஸர்பபூஜாம் கரவாணி தே ॥
(ஸுதக்ருஷ்ணா)

268. சுக்கில கிருஷ்ண பஞ்சமியின் அபிமானியான ஸர்ப தேவதையின் த்யானம்.

ஹே ஸர்பராஜனே! என்னுலே அழைக்கப்பட்ட தாங்கள், இந்தப்பிரதிமையில் உட்காரவேண்டும். நான் ஸகலவிதமான ஸம்பத்துக்களையும் அடைவதற்காக தங்களுடைய பாதாரவிந்தங்களைப் பூஜை செய்கின்றேன். (வெளுப்பு நிறம்)

ஓம்ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யஷஷ்டியஹிமாதி
ஷஷ்டாநதிதேவதாயாஃ ஸ்யாநம்.

ஷஷ்டாநந நமஸ்யாமி தே கமலாணி வத்ஸலயோஃ।
வ்ருதிமாயாம் ஹிரண்மயீமஹி வல்லீநாயிகே ॥
(ஸ்கந்தவணம்)

269. சுக்கில-கிருஷ்ண ஷஷ்டியின் அபிமானியான ஆறுமுக தேவனின் த்யானம்.

ஹே ஆறுமுகனே, நான் தங்களுடைய சரண கமலங்களை நமஸ்கரிக்கின்றேன். வல்லீ தேவியின் மனதிற்கு பிரியமானவரே, ஸுவர்ணமயமான பிரதிமையில் தாங்கள் வந்து அமரவேண்டும். (சிவப்பு நிறம்)

ஓம். ஸுப்ரஹ்மண்யஸப்தமியஹிமாதி
ஸவித்ருஸ்ய யாநம்.

ஸஹஸ்ர லாகநா சம்பாஸோ வ்ருதிமாகஹி வாஹநம்।
த்ரயீதநோ நமஸ்யாமி தே ஸவித்ரியோ ஸவித்ரியஃ
கமண்டலுதர ॥
(ஸ்கந்தவணம்)

270. சுக்கில கிருஷ்ண ஸப்தமியின் அபிமானி தேவதையான ஸவித்ரியனுடைய த்யானம்.

ஆயிரம் கிரணங்களுடையவரும், வேதங்களின் வடிவமாக இருப்பவருமான (மூன்று வேதங்களின் பொருளாக இருப்பவருமான) ஹே ஸவித்ரியனே, தங்களை நான் மறுபடியும் மறுபடியும் வணங்குகின்றேன். (சிவப்பு நிறம்)

ஓம். ஸுப்ரஹ்மண்யாஷ்டம்யஹிமாதி
ஸவத்ஸராதபஸ்ய யாநம்.

ஸதெ்ஜாத நஉஷ்ஷஷ்ஷ மளரீ நாய நஒொஷ்ஷ தெ।
வ்ரஹாஷம கூஷ்ஷ ஷெ ஸ்ஸ்மொ வ்ரதிஷாஷெஹி ஸாஷஷ்ஷ ॥

(ஷ்ரெதவணஃ)

271. சுக்கில கிருஷ்ண அஷ்டமியின் அபிமாநியான ஸத்தியோஜாதரின் த்யாநம்.

ஹே ஸத்தியோஜாதரே, தங்களை வணங்குகின்றேன். ஹே கௌரீ தேவியின் கணவனே, தங்களை வணங்குகின்றேன். ஹே சம்போ (ஸகல மங்களங்களையும் அளிப்பவரே) எனக்கு அருள் புரியவேண்டும். அன்புடன் பிரதிமையில் வந்திருக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

உஎ உ. சுய ஸுக்ஷ்ணக்ஷ்ண நவஸ்ஹிஷாநி
ஊஸுயாஃ யாநழி.

ஊஸெ்ரு தீ நயநெ சம்ஸ்ரகஸ்யாங்கிதஸிரொஸுஹெ ।
ஸஹாஸதெ வ்ரஹாஷம ஷெ ஸுசயாஸுஷ ஸுஸெஸ்ஸ்ரஸ்ரி ॥

(ஸுஸவணஸ்ரா)

272. சுக்கில கிருஷ்ண நவமியின் அபிமாநி தேவதையான துர்கையின் த்யாநம்.

மூன்று கண்களுடையவளும், சந்திரகலையை அணிந்திருக்கின்ற கூந்தலையுடையவளும், தேவர்களுக்கு நாயகியாக இருப்பவளுமான ஹே துர்கா தேவி, இந்தப் பிரதிமையில் வந்திருந்து சீக்கிரமாக எனக்கு அருள் புரிய வேண்டும்.

உஎக. சுய ஸுக்ஷ்ணக்ஷ்ணஸுஸ்ஹிஷாநி
ஸொஷஷெவதாயாஃ யாநழி.

ஸுஹாஸஸுஸ்ஹுஸ்ரீவாய விஷ்ணவாஷாங்களஹயெ ।
நஒொ நஒொஷ்ஷ நாமாய வ்ரதிஷாஷெஹி ஸாஷஷ்ஷழி ।

(ஸுஸ்ஹவணஃ)

273. சுக்கில கிருஷ்ண தசமியின் அபிமானி தேவதையான ஆதிசேஷனின் த்யானம்.

பூபாரத்தினுலே வணங்கிய கழுத்தையுடையவரும், விஷ்ணுவின் பாதங்களினுலே அடையாளம் செய்யப்பட்ட சிரஸ்ஸுகளையுடையவரும், ஸர்ப ஸ்வரூபியாக இருப்பவருமான ஹே சேஷனே, தங்களை வணங்குகின்றேன். தாங்கள் இந்தப் பிரதிமையை வந்து அடையவேண்டும். (வெளுப்பு நிறம்)

உஎச. ஈய ஸுக்லகிருஷ்ணதஶம்யபிமானிதேவதாயாஃ ஆதிஶேஷஸ்ய த்யானமந்த்ரஃ.

ஶ்ரீமதிவைகுண்டநிவாஸ பாதாரவிந்தத்வயே ।
ஸ்ரீநிதயஸ்தாயநாய யஜ்ஞாய உரகேந்த்ரஃ ॥

(நீலவண்ணஃ)

274. சுக்கில கிருஷ்ண ஏகாதசியின் அபிமானி தேவதையான தருமதேவதையின் த்யானம்.

வேதங்களினுலே அறியத்தக்க ஸ்வரூபமுடையவரும், யாகம் முதலிய கிரதுக்களின் வடிவமாக இருப்பவரும், ஏராளமான க்ஷேமங்களுக்கு ஸாதனமாக இருப்பவரும், பெருமை வாய்ந்தவருமான தருமதேவனை வணங்குகின்றேன். (நீலநிறம்)

உஎடு. ஈய ஸுக்லகிருஷ்ணைகாதஶ்யபிமானிதேவதாயாஃ தர்மதேவதாயாஃ த்யானமந்த்ரஃ

ஹரெ ஜகத்ரயாயீஶ வக்ஷோவஸ்துல ஶாயின ।
வேதிதாகேத வஸுதா வ்ரதாகம கோசர விஶ்வ ॥

(கபிலவண்ணஃ)

275. சுக்கில கிருஷ்ண துவாதசீ அபிமானியான ஹரிதேவதையின் த்யானம்.

ஹே ஹரே, மூன்று உலகங்களுக்கும் ஈசனாக இருப்பவரே, லக்ஷ்மீதேவியின் கணவனாக இருப்பவரே, ஹே மாதவ, எங்கும் நிறைந்தவரே, தாங்கள் உடனே இந்த பிரதிமையை வந்து அடைந்து எனக்கு அருள் செய்ய வேண்டும். (தங்கநிறம்)

உஎசு. ஈய ஸுகூர்ஷ துயொஸுஹிஸாநி
உநயதெவதாயாஃ யுாநடி.

ஸதிவல்லப வாஷாஸ்ரு நாராயண தநூஜ்வ ।
வாஹீஸம் வ்ருதிஸம் தமிணஃ வுஹீஷ உயி உநய ॥

(கூஷுநவணஃ)

276. சுக்கில கிருஷ்ண திரயோதசி அபிமானி மன்மத தேவதையின் த்யானம்.

ஹே ரதி தேவியின் கணவனே, புஷ்பங்களை கணைகளாகக்கொண்டவனே, மஹாவிஷ்ணுவின் புதல்வனே, ஹே மன்மதனே, தாங்கள் சீக்கிரமாக இந்தப்பிரதிமையை வந்து அடையவேண்டும். எனக்கு அருள் புரியவேண்டும். (தங்க நிறம்)

உஎள. ஈய ஸுகூர்ஷவதூஉுஸுஹிஸாநி
கூறிவாஸுஷவ யுாநடி.

வஸவுாயஉுவ வத்தாரம் ஸவஉுவாவவ்ரவதஉுகம் ।
வஷுநாவதாரம் வதெ லஹிதயெ கூறிலஹிவதிம் ॥

(கூர்ஷ்ணவணஃ)

277. சுக்கில கிருஷ்ண சதுர்தசியின் அபிமானி தேவதையான கலிபுருஷனுடைய தியானம்.

ஸகலவிதமான அதருமங்களையும் பேசுகின்றவனும் ஸகலவிதமான பாபங்களையும் செய்யும்படி செய்கின்றவனும், ஏமாற்றுவதில் மிகுந்த ஸாமர்த்தியமுடையவனுமான கலியுகத்தின் அதிபனை (கலிபுருஷனை) ஸகல ஐசுவரியங்களும் கிடைப்பதன்பொருட்டு நமஸ்கரிக்கின்றேன். (கருப்பு நிறம்)

உஎஅ. ஸுய வர்ணிபாஹிபாநி
யம்ஹ்ரஷெவதாயாஃ யுக்தநு.

யவபுரீவபாணஹெவ்ராய முக்தீகாஃகவக்ஷஷெ |
க்ஷீராஷ்விர்யவாதூய நஃஸ்ஹ்ரஷெவஷ்டு தெ ||
(ஸ்வேதவர்ணஃ)

278. பௌர்ணமியின் அபிமானி தேவதையான சந்திரனுடைய தியானம்.

ஸகல தேவர்களாலேயும் ஸேவிக்கப்படுகின்றவரும், லக்ஷ்மீகாந்தனான மஹாவிஷ்ணுவிற்குக் கண்ணாக விளங்குகின்றவரும், பாற்கடலின் அன்பிற்குரிய புதல்வனுமான ஹே சந்திரனே, தங்களுக்கு என் நமஸ்காரங்கள் உரியனவாகுக. (வெளுப்பு நிறம்)

உஎக. ஸுய ஸுராவாஹ்யாஹிபாநி
விஷ்ணுதெவதாநாம் யுக்தநு.

விஷ்ணுயொகநிவாஹிஷ்யஃ விஷ்ணுஹ்ருதயாய
நமொ நமஃ |
ஸ்ரீதிராம் ஸ்ரீவர்ச ஸுலவண்யம் ஸ்ரவஸ்யதாம்
ஸஹ ஆயி ||
(கிருஷ்ணவர்ணஃ)

279. அமாவாஸியையின் அபிமாநி தேவதைகளான பிதிரு தேவதைகளின் தியாநம்.

பிதிருலோகத்தில் வஸிப்பவர்களான பிதிருக்களுக்கு எனது நமஸ்காரங்கள் உரியனவாம். அந்த பிதிரு தேவதைகள், ஸுவர்ணமயமான பீரதிமையை வந்தடைந்து எப்பொழுதும் எனக்கு அருள்புரிவார்களாக. (கருப்பு நிறம்)

ஸுய வாரஷ்ரீவாணி --

(யஷ்வெ ஷாதவம்பை)

உஅயி. தத்ஷாஷ ரவிவாரஷ்ரீவழி.

வஷாவஹஃ வஷுகரஃ வஷுமஹுவஷஷ்டாதிஃ |
வஷாஷ்ரீரய்வம்யக்தஃ ஜிஹ்ரீஜஃ ஷ்யாத்ஷா ரவிஃ ॥

(வாடஷவண்ணஃ)

280. வாரங்களின் ஸ்வரூபங்கள்.

(மயூகத்தில் தாநகண்டத்தில்)

அவைகளுள் முதலாவது ரவிவார ஸ்வரூபம்.

ரவிவார தேவதையான ரவியானவர், எப்பொழுதும் தாமரை மலரில் வீற்றிருப்பவரும், கையில் (கைகளில்) தாமரை மலரை வைத்துக்கொண்டிருப்பவரும், தாமரை மலரின் மத்தியபாகத்தையொத்த நிறமுடையவரும், 7 குதிரைகள் பூட்டிய ரதத்திலிருப்பவரும், 2 கைகளுடைய வருமாவார். (பாடலவர்ணம்—வெண் சிவப்பு நிறம்)

உஅக. ஸுய ஷொஷவாரஷ்ரீவழி.

ஷ்வேதஃ ஷ்வேதாம்வரயரொ ஷுஷ்ரஃ ஷ்வேதலஷிஷணஃ |
மஷாவாணிஷிஃவாஹஷ்ரீ கதஃவெர்ய வரஷ்ரஸ்ரீ ॥

(ஷ்வேதவண்ணஃ)

281. ஸோமவார ஸ்வரூபம்.

ஸோமவாரத்திற்கு அதிதேவதையான சந்திரனவர், வெளுப்புநிறமாக இருப்பவரும், வெண்மையான ஆடையை தரித்திருப்பவரும், 10 குதிரைகளையுடையவரும், (10 குதிரைகள் பூட்டிய ரதத்திலிருப்பவரும்) வெளுப்பு நிறமான அணிகளையணிந்திருப்பவரும், கதையை கையில் வைத்துக்கொண்டிருப்பவரும், 2 கைகளுடன் கூடியவரும் ஆவார். ஸகலவிதமான வரன்களையுமளிக்கவல்லவரான சந்திரனை இவ்வித லக்ஷணங்களுடன் கல்பிக்கவேண்டும். (வெளுப்பு நிறம்)

உஅஉ ஸ்ரீ உஜ்ஜவாரஹ்ஸ்ரீவழி.

ரக்தாம்பராயுதாம்பராயை ஸக்திஸூலாயுதாயை ।
சதுர்புஜோ ஜ்ஷமஹோ வரதஃ ஸ்யாஜ்ஜராஹரதிஃ ॥

(ரக்தவணஃ)

282. அங்காரக வார ஸ்வரூபம்.

அங்காரகவாரத்திற்கு அதிதேவதையான செவ்வாயானவர், சிவப்பான மாலை, வஸ்திரங்களை தரித்துக்கொண்டிருப்பவரும், சக்தி, சூலம், கதை இவைகளை தரித்துக்கொண்டிருப்பவரும், 4 கைகளுடையவரும், ஆட்டுக்கடாவாஹநத்தில் செல்லுகின்றவரும், ஸகல வரன்களையுமளிப்பவருமாவார். (சிவப்பு நிறம்)

உஅங. ஸ்ரீ வ்யவாரஹ்ஸ்ரீவழி.

வீதராக்தாம்பராயை கணிகாரஸ்ரஜே சிதிஃ ।
சதுர்புஜாயை ஸக்திம் கதாம் சூலம் வரம் ததே ॥

(வீதவணஃ)

283. புதவார ஸ்வரூபம்.

புதவாரத்திற்கு அதிதேவதையான புதனை வர், மஞ்சள் நிறமான மாலை, ஆடைகளைப் பூண்டிருப்பவரும், கர்ணிகார புஷ்பத்தைப்போன்ற (கர்ணிகாரம்–கோங்கிலவு இதன் புஷ்பம் மஞ்சள் நிறமானது) சரீரகாந்தியையுடைய வரும், கத்தி, கேடயம், கதை இவைகளை கைகளில் தரித்துக்கொண்டிருப்பவரும், ஸிம்ஹ வாஹனத்தில் வீற்றிருப்பவரும், வரன்களையளிப்பவருமாவார். (மஞ்சள் நிறம்)

உஅச. சுய முஊஊஊகூவாஊயொஃ ஷ்ஊஊவழ.

ஒவஒஎதூஊஊஇ ஸுஜள வீதஷ்ஒதள
வதஊலுஜள ।
ஃம்பிநள வஊஉள காயஃள வாக்ஷஷ்ஊஇதூகஃம்பஷ்ஊஇ ॥
(ஷ்ணஃழ்ஒதவணஃள)

284. குரு-சுக்கிரவாரங்களின் ஸ்வரூபங்கள்.

தேவகுருவான பிருகஸ்பதி, அஸுரகுருவான சுக்கிரன் இவ்விருவர்களும், தூய்மையுடையவர்களும், முறையே மஞ்சள், வெளுப்பு நிறமுடையவர்களும், 4 கைகளுடைய வர்களும், தண்டம், வரதம், ஜபமாலை, கமண்டலம் இவை களை தரித்திருப்பவர்களுமாவார்கள். இவர்களை இவ்வித மான லக்ஷணங்களுடன் கல்பிக்கவேண்டும். (முறையே ஸுவர்ணவர்ணமும் வெளுப்பு நிறமுமாவார்கள்.)

உஅடு. சுய ஷ்ஹிஊவாஊஷ்ஊஊவழ.

ஃஃஊநீஷாகூதிஃ ஸுஷ்ஹீ வஊஒஊ ஹூயூவாஹஃ ।
ஷ்ணஷ்ணாஷஃநயஊஃ கதஃவெஷ்ஆகஃஷ்ஊதஃ ஷ்ஹா ॥
(நீஷவணஃஃ)

285. சனிவார ஸ்வரூபம்.

சனிவாரத்திற்கு அதிதேவதையான சனைச்சரபகவானவர், இந்திரநீலக்கல்லின் நிறமுடையவரும், சூலம், வரதம் இவைகளை தரிப்பவரும், கழுகு வாஹனத்திலிருப்பவரும், அம்பு, வில் இவைகளை தரித்துக்கொண்டிருப்பவரும் ஸூரியனுக்குப் புதல்வனுமாவார். இவரை எப்பொழுதும் இவ்வித லக்ஷணத்துடன் கல்பிக்கவேண்டும். (நீலநிறம்)

சய ரவ்யாதிவஷ்டவாரேஷு கதபுவ்யாதி —

(நாரதீயே)

தத்ராதௌ ரவள —

கர்யவாதிஷேகராஜ்ஞாமஹவாயாநாதிகரபு யச்ச ।

ஔஷ்யாஹவயாகர்யாதி நிருயம் லாகர்வாவஹரே ॥

ரவிவாரம் முதலான ஏழுவாரங்களில்
செய்ய வேண்டியவைகள்.

(நாரதீயத்தில்)

அவைகளுள் ரவிவாரத்தில்.

ஞாயிற்றுக்கிழமையில் அரசர்களுக்குப்பட்டாபிஷேகம், மங்களகரமான காரியங்கள், பிறரிடத்தில் ஸேவகம் செய்வது, வாஹந காரியங்கள், மருந்து (செய்வது உண்பது) போர் (துவக்குவது செய்வது) தான்யம் முதலியன, (வாங்குவது, சேர்ப்பது, விற்பது) வீடு (கட்டுவது) இவைகளைச் செய்யவேண்டும்.

ஸொமெ —

ஸம்வஸுகாம்வரஜதவ்யஷேக்ஷுஸ்ரீநிஷேவணே ।

வஸ்த்ரீதக்ருதக்ஷீரகர்யஷிகரபுந்வாவஹரே ॥

ஸோமவாரத்தில்.

நீங்கள் கிழமையில், சங்கு, முத்து, ஜலம், வெள்ளி, மரம், கரும்பு இவைகள் ஸம்பந்தமான காரியங்கள், ஸ்திரீகளுடன் புணர்ச்சி, புஷ்பம், கீதம், வேள்வி, பால், பயிரிடுதல் ஆகிய காரியங்கள் இவைகளைச்செய்யவேண்டும்.

உஜுஹெ —

விஷாழிவஸுநஷ்டெயவஸுவிஸ்ருஹராஹவம் ।
யாகுவாகுஸுவாஹாஹ்ருகூஉ ஸுஜிஜவாஹஸெ ॥

மங்களவாரத்தில்.

செவ்வாய் கிழமையில், விஷ காரியங்கள், அக்கினி காரியங்கள், பந்தன காரியங்கள், திருடுவது, ஸந்தி (ஸமாதானம்) செய்வது, விரோதித்துக்கொள்ளுவது, போரிடுவது, தாதுப்பொருள்கள், சுரங்கங்கள், பவழம், அஸ்திரங்கள் (ஆயுதங்கள்) இவைகள் ஸம்பந்தமான காரியங்கள் இவைகளைச் செய்வதாகும்.

வுயெ —

ஸுதுஸிவுகுவுரீதவிவுஷ்டுவிஸ்ருஹம் ।
விவாஹயாதுஷம்ஸுஉகூஉ வஸுஹுவு வாஹஸெ ॥

புதவாரத்தில்.

புதன்கிழமையில் நாட்டியம், சில்பம், கலைகள், கீதம், எழுத்துக்கள், புஸ்தகங்கள், விரோதித்தல், வியவஹாரம், தாதுக்கள், போர், இவைகள் ஸம்பந்தமான காரியங்களைச் செய்வதாகும்.

ஸுஸுள —

யஜுவளவ்டிகூஉம்ருவுஷுணுவஷ்ஷுஹிஷவிஷணம் ।
வுக்ஷுஸுஷுவுதாயாநகூஉ ஷெவெஜுவாஹஸெ ॥

குருவாரத்தில்.

வியாழக்கிழமையில், வேள்வி, சரீரபுஷ்டிகரம், மங்கள கரம், தங்கம், வஸ்திரம் முதலியன. பூஷணம், மரங்கள், செடிகள், கொடிகள், வாஹநங்கள் இவைகள் ஸம்பந்தமான காரியங்களைச் செய்வதாகும்.

ஸுக்ர —

ஸுதுகீதாதிவாதித்ரவணஸுஸ்ரீஸுதஸுஷணம்।
வணைஸ்ரீவாதிமொயாஸுகஸுஸுவாஸரே॥

சுக்கிர வாரத்தில்.

நிருத்தியம், கீதம் முதலியவை, வாத்தியம், ஸுவர்ணம் ஸ்திரீ, ரத்தினம் ஆபரணம் விலைகொடுத்து வாங்கக்கூடிய பொருள்கள், உத்ஸவம் முதலியவை, பசு, தானியங்கள் இவைகளின் ஸம்பந்தமான காரியங்களை சுக்கிரவாரத்தில் செய்வதாகும்.

ஸுநள —

தூவஸீஹாயஹாஸ்ரஸுவிஷவாவாஸவாஸுதம்।
ஸ்ரஸுஸுவிஸும் வாஸுவஸம்ஸுஹஃ ஸளரிவாஸரே॥

சனிவாரத்தில்.

சனிக்கிழமையில், பித்தளை, ஈயம், இரும்பு, அஸ்திரம், (ஆயுதம்) கருங்கல், விஷம், பாபகரமான காரியம், பாஸங்கள் (கள்-சாராயம் முதலியவைகள்) பொய், ஸ்திர மாக (அழிவில்லாது நெடுங்காலம்) இருக்கவேண்டிய காரியங்கள் யாவும், வீடு வாங்குதல், இவைகளைச் செய்வ தாகும்.

ஸுய ஸுவ்ராதிவஸுவாஸுஷ விஷ நாஸீ
ஸுவெஸுகாஸுரஃ —

(உஸுமுதஃ மணவதள)

ஸூர்யாதிக்ரஹாணாம் ச ஸர்வேஷாம் ஆதிமம் வந்தே ।
ஆதிதேவம் தம் ஸர்வைவ ஸ்ரீமதீம் வந்தே வந்தே ஸர்வதா ॥

வந்தேவிஷ்ணுசிவாதீம்ஸ்ச விஷ்ணாதீம்ஸ்ச ஸுரர்ஷிபிஃ ।

ஸ்ரீமாந்தரே —

வந்தேவிஷ்ணா ஸுரர்ஷிபிஃ ச ஸர்வாவிஷ்ணா
ஸுரர்ஷிபிஃ ।
வந்தேவிஷ்ணா ஸுரர்ஷிபிஃ ச ஸர்வாஷ்ணாதிகாஃ ॥

ரவிவாரம் முதலான ஏழுவாரங்களில் விஷநாடி பிரவேசிக்கின்ற காலங்கள்.

(முஹூர்த்த கணபதியில்)

ரவிவாரத்தில் 20 நாழிகைக்குப்பிறகும், ஸோம வாரத்தில் 2 நாழிகைக்குப்பிறகும், பௌம வாரத்தில் 12 நாழிகைக்குப்பிறகும், புதவாரத்தில் 10 நாழிகைக்குப் பிறகும், குருவாரத்தில் 7 நாழிகைக்குப்பிறகும், சுக்கிர வாரத்தில் 5 நாழிகைக்குப்பிறகும், சனிவாரத்தில் 25 நாழிகைக்குப்பிறகும், விஷநாடி பிரவேசிக்கின்ற காலமாகும் என்று கூறப்பட்டிருக்கின்றது.

மற்றொரு நூலில்—

குருவாரத்தில் 21 நாழிகைக்குப்பிறகும், புதவாரம், பௌம வாரங்களில் 22 நாழிகைக்குப்பிறகும், சுக்கிரவாரம் பானுவாரங்களில் 25 நாழிகைக்குப்பிறகும், சனிவாரம், ஸோமவாரங்களில் 8 நாழிகைக்குப்பிறகும், விஷநாடி காலமாகும்.

[விஷநாடி காலமாவது விஷத்தைப்போல மிகக் கொடுமையான கேடுகளை விளைவிக்கும் நாழிகைகள் என்பது பொருள். இது தியாஜ்யம், ராகுகாலம் முதலியவைகளைப் போல 4 நாழிகையாகும். எனவே மேலே கூறப்பட்ட

நாழிகைக்குப்பிறகு 3½ நாழிகை காலம், வாரங்களில் விஷ காலங்களாகும் என்பது பொருள். இந்த காலங்கள் சுபகரமான சுபகரமான காரியங்களுக்குக் கூடாதவை களாம்.]

அத² ரவ்யாதிவாரேஷ்வ்ருக்தது³வ்யதா³நாநி ---

(ப்³ரஹ்மபு⁴ராணே)

ஸுஹ்ருல்லுப்³தா⁴நுயாநுபஜீவ்யோ விப்ரேப்⁴ய꞉

ப்ரயச்ச²தி ।

தத்தத்தம் வைவ தத்³தா³நம் தத்³தா⁴நம் வஸ்து³வை வ ॥

தத்தி³வஸேஷ்வயமேவ்ருக்தோ வஸ்வாதி³நு

க்ராஹ்யவாக்யாச் ।

ரவிவாரம் முதலிய வாரங்களில் செய்யவேண்டிய தானங்கள்.

(பிரம்மாண்ட புராணத்தில்)

ஸூரியன் முதலிய கிரஹங்களை ஸ்மரணத்தினால் செய்து, அதையும், அந்தந்த கிரஹங்களுக்குரிய ரத்தினம், தானியம், கிரஹங்களின் நிறமுடைய வஸ்திரம் இவை களையும், அந்தந்த கிரஹங்களுக்குரிய வாரங்களில் தனது சக்திக்குத்தகுந்த முறையில் யாதொருவன் பிராம் ஹணர்களுக்கு தானம் செய்கின்றானோ, அவன், தான் விரும்பியவைகள் எல்லாவற்றையுமடைவான்.

அத² தத்தவாரேகதி²வ்ருதா³நாநிவ்யாக்²யாஸ்யாம꞉ ---

(விஷ்ணுதர்மோத்தரே)

தத்ராதௌ³ ரவிவாஸரே ---

ரவணாஜ்ஜ்ஞாநயோவைதத்³வ்ரதம் ஸம்யகு³பாஸரே ।

ஸஹிரண்யம் நரோ தே³யா ந ரோகை³ரபி³த்⁴யதே ॥

அந்த அந்த வாங்களில் தனித்தனியே செய்யவேண்டிய தாநங்கள்.

(விஷ்ணு தருமோத்தரத்தில்)

அவைகளுள் ரவிவாரத்தில்.

பாநுவாரத்தில், உப்பு, நெய், வெல்லம் இவைகளுடன் அபூபத்தை (அதிரஸத்தை) ஸுவர்ணத்துடன் தாநம் செய்கின்ற மனிதன், ரோகங்களினுலே பீடிக்கப்பட மாட்டான். (1)

வொர்ஜவாஹரெ —

வனவம்வியம் வெநுஹிநெ உகுவா வளலோஹுஜாவுயாஸு।

ஸோம வாரத்தில்.

திங்கள்கிழமையில், இவ்விதமாக தாநம்செய்கின்றவன் ஸௌபாக்கியங்களையடைவான். (2)

லளஜவாஹரெ —

காஷுஹாநெ லளஜிநெ ஸுதூ(தூ)நூஸு

ஜவாவுயாஸு॥

பௌமவாஸரத்தில்.

செவ்வாய்கிழமையில், மரக்கட்டைகளை தாநம் செய்கின்றவன், சத்துரு நாசத்தையடைவான். (3)

வுயவாஹரெ —

வுயெ கீர்ஜநகாநாம ஜ ஜாநம் வாயுஷு ஸுஹுதெ।

புதவாஸரத்தில்.

புதன் கிழமையில், விளையாட்டுப் பொருள்களை குழந்தைகளுக்கு தாநம் செய்வது (கொடுப்பது) சிறந்ததாகும். (4)

ஸுரவாஸரே —

ஜீவெந்ரு வஸ்தூநெந வராம் வாஷிம் வஸ்தூதெ ॥

குருவாஸரத்தில்.

வியாழக்கிழமையன்று வஸ்திரத்தை தானம் செய்பவன் புஷ்டியையடைவான். (5)

ஸுக்ரவாஸரே —

ஷ்வேதம் தாரஜுராஷ்வொதி ஸுக்ரே உக்ஷா ரதிம் ஹ்ரியஃ।

சுக்கிரவாஸரத்தில்.

வெள்ளிக்கிழமையில் வெள்ளைக்குதிரையை தானம் செய்பவன், ஸ்திரீகளின் பிரீதியையடைவான். (போக ஸுகத்தையடைவான்.) (6)

ஸநிவாஸரே —

சுஷ்ரூம் வஸாரிஷிவஹெ உக்ஷா ஜீவிதாரூயாசு ॥

சனிவாஸரத்தில்.

சனிக்கிழமையில் உடம்பு முழுவதும் தேய்த்துக் கொண்டு குளிக்கும்படி எண்ணெயை தானம் செய்பவன் வெகுகாலம் பிழைத்திருப்பான். (7)

அத ரவ்யாதி ஸப்தவாரேஷு ஜாதானாம் நாமானி:—

(ஜாதகாஹரணே உபயுக்தானி)

தத்ராதௌ ரவௌ —

ஸூரொலுகெரொ விஜயீ ரவிர்மே
ஸுதாரவிர்ணஃ விதத்தயஃ (வஃ)ஸுகொவஃ।
ஆதா உஹொத்தாஹயதொ உஹளாஜாஃ
திந திநஸுஹ்ய ஹவெந்நரஷ்யஃ ॥

ரவிவாரம் முதலிய 7 வாரங்களில் பிறந்தவர்களின் குணங்கள்.

(ஜாதகாபரணத்திலும், வேறிடத்திலும்)

அவைகளுள் முதலில் ரவிவாரத்தில்.

ஞாயிற்றுக்கிழமையில் பிறந்த மனிதன், சூரனும், ஸ்வல்பமாக மயிருடையவனும், (வழுக்கை விழுந்த தலையுடையவனும்), போர் முனையில் ஜயமடைகின்றவனும், கருப்பும், சிவப்பும் கலந்த நிறமுடையவனும், அதிகமான பித்தமுடையவனும் (பித்தாதிக்மான சரீரமுடையவனும்) அதிக கோபமுடையவனும், தாநசீலனும், அதிக உத்ஸாஹமுடையவனும் சிறந்த தேஜஸ்ஸுடையவனும் அல்லது அதிக மனோவலிமையுடையவனுமாவான். (1)

ஹொரை —

ரூதஃ ரூஜாதஃ ஸ்ரீ யவாகூ வியிஜூஃ
ஸ்ரூஸு நரொஃரூாஸ்ரயவ்ருத்திஃரஃஸ்ரு ।
ஸுவெ ச ஊஃவெவி ஸஃஸ்ஸுஹாஃவஃ
வாரெ நரஃ ஸீதகுரஹ்ரு ஜாதஃ ॥

ஸோமவாரத்தில்.

திங்கள் கிழமையில் காலையில் பிறந்த மனிதன், பிரியமாகப் பேசுகின்றவனும், முறையறிந்தவனும், எப்பொழுதும் அரசனை அண்டி வேலை பார்ப்பவனும், ஸுகம், துக்கம் இவைகளில் ஸமமான ஸ்வபாவமுடையவனுமாவான். (2)

ஹூரை —

வக்ரொத்திரதுஞ்சுணஸ்ரீ யஹ்ரூாஸு
நரொஃரூஃஸ்ரீ ச வநொவஜீவீ ।

வக்வாஸி சஷ்ட்வ்ருதாஸ்ருஹாவஃ

